விலை ரூபா 1-25

ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 ஆடி 30 ஜூல்கஃ 8 இதழ் 186

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 15-8-1986

'பேச்சுக்கள்மூலம் ஆக்கபூர்வ தீர்வு காணுங்கள்.'

இலங்கை, இந்திய அரசுக்கு மகஜர்

புதுடில்லி ஆகஸ்ட் 14

இனப் பிரச்னைக்கு தீர்வு காணும் முகமாக நடைபெறும் பேச்சுக்களில் சகல தரப்பினரும் முக்கிய கவனமெடுத்து, ஆக்கபூர்வமான முடிவைக் காணவேண்டும். என்று கோரி இந்திய இலங்கை மைத்திரி சங்கத்தைச் சேர்ந்த 428 பேர் கையெழுத்திட்டு மகஜர் ஒன்றை இலங்கை அரசுக்கு அனுப்பி வைத்துள்ளதுடன் இந்திய அரசிடமும் கையளித்துள்ளனர்.

மேற்படி மகஜரில், இந்தியன் எக்ஸ்பிரஸ் உதவி ஆசிரியர் திரு ராஜ்மோகன் காந்தி, சென்னை பல்கலைக்கழகப் பேராசிரியர் சூரிய நாராயணன் உட்பட அறுபது பேராசிரியர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் ஆகியோர் கையெழுத்திட்டுள்ளனர்.

அம் மகஜரில், இனப் பிரச்னைக்கு விரைவான தீர்வுகாண்பதன் மூலம் வன்முறைகள் களையவெண்டுமென்றும் பிரச்னைக்குப் பேச்சுவார்த்தைகளின் மூலம் தீர்வு காண்பதையே தாங்கள் வரவேற்பதாகவும், இனப்பிரச்னைக்குத் தீர்வுகாண வன்முறைகள் ஒரு போதும் வெற்றியளிக்காது என்றும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (கூ - எ)

திருமலையில் சம்பவம்

புலிகள் புதுமுறை தாக்குதல்

ஆறு இராணுவம் பலி

(நமது நிருபர்)

திருமலை மாவட்டத்தில் நேற்றுக் காலை விடுதலைப் புலிகள் புதிய ரக 'கனொன் சார்ஜ்' இனை வெடிக்கச் செய்ததில் ஆறு இராணுவத்தினர் பலியானார்கள். மற்றும் பலர் படுகாயமடைந்தனர்.

இத்தாக்குதல் சம்பவம் குறித்து தமிழீழ விடுதலைப் புலிகள் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

திருமலை மாவட்டத்திலுள்ள மொரவேவ இராணுவ முகாமிலிருந்து 50க்கு மேற்பட்ட இராணுவத்தினர் நேற்றுக் காலை 7 மணியளவில் நடைபவனியாக ரோந்து நடவடிக்கைக்காகப் புறப்பட்டனர்.

இராணுவத்தினர் கோமரங்கடவை என்னுமிடத்தை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்து கொண்டு சென்றனர். அவ்வேளை விடுதலைப் பலிகள் புதிய ரக 'கனொன் சார்ஜ்' இனை இயக்கி வெடிக்கச் செய்தபொழுது ரோந்து சென்ற இராணுவத்தினரில் 6 பேர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர்; பலர் படுகாயமடைந்தனர். அவ்விடத்திலேயே நிலை கொண்டு எதிர்த்தாக்குதல் செய்யமுடியாத நிலையில் தமது இழப்புகளுடன் மீண்டும் முகாமை நோக்கி இராணுவத்தினர் நகர்ந்தனர்.

இத்தாக்குதலின் போது எமது தரப்பில் எதுவித இழப்புகளும் ஏற்படவில்லை'' இவ்வாறு அவ்வறிக்கையில் குறிபபிடப்பட்டுள்ளது. [மா]

எம். ஜி. ஆர். நம்பிக்கை

சென்னை ஆக. 14

''இலங்கை அரசுக்கும், தமிழ்த் தலைவர்களுக்கும் இடையே நடைபெறும் பேச்சுக்கள் வெற்

[4ம் பக்கம் பார்க்க]

வட-கிழக்குஇணைப்புகுறித்து கூட்டணி வலியுறுத்தும்

(கொழும்பிலிருந்து நமது நிருபர்)

இனப்பிரச்னையைத் தீர்த்து வைக்கும் முகமாகத் தெரிவிக்கப்பட்ட ஆலோசனைகள் குறித்து அரசுக்கும், தமிழர் விடுதலைக்கூட்டணிக்கும் இடையேயான இரண்டாவது சுற்றுப் பேச்சுக்கள் இன்று ஆரம்பமாகும்.

இன்று மாலை 5 மணிக்கு பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஆரம்பமாகும் பேச்சுக்களுக்கு இலங்கைக் குழுவுக்கு ஜனாதிபதி ஜெயவர்த்தனாவும், தமிழர் விடுதலைக்கூட்டணியின் குழுவுக்கு செயலாளர் நாயகம் திரு அமிர்தலிங்கமும் தலைமை தாங்குவார்கள்.

இதேவேளை கூட்டணிக்குழு நேற்று சென்னையிலிருந்து கொழும்பு வந்து சேர்ந்தது.

இக்குழுவில் தலைவர் திரு. மு. சிவசிதம்பரம், செயலா

(4-ம் பக்கம் பார்க்க)

முகாம் சென்றோர் இளைஞர் கோஷ்டியினால் எச்சரித்து விடுதலை

வவனியா, வியா.

வவனியா தச்சன்குள இராணுவ முகாமிற்குச் சென்ற கிராம சேவை அலுவலர், விசேஷ சேவை அலுவலர், மற்றும் பத்து கிராமோதய சபை உறுப்பினர்கள் இளைஞர் கோஷ்டி ஒன்றினால் முகாமிற்கு செலல விடாது தடுத்து வைக்கப்பட்டனர்.

நேற்று தச்சன்குள இராணுவ முகாமின் அழைப்பின் பேரில் இவர்கள் அங்குசென்று கொண்டிருக்கையில் புதூர் சந்தியில் வைத்து இளைஞர் கோஷ்டி ஒன்றினால் கடத்தப்பட்டு 6 மணித்தியாலங்கள் தடுத்துவைக்கப்பட்டனர்.

மீண்டுமொருமுறை இராணுவ முகாமிற்குச் சென்றால் மரணதண்டனை விதிக்கப்படும் என்ற கடுமையான எச்சரிக்கையுடன் அன்று பிற்பகலே விடுவிக்கப்பட்டனர்.

இச் சம்பவம் தொடர்பாக நெடுங்கேணி உதவி அரசாங்க அதிபருக்கு அப்பகுதி கிராம சேவையாளர் தெரிவித்துள்ளார். [வா-எ]

பொருள்கள் கொள்ளையின் பின் லொறியுடன்மூவர்எரிப்பு

வவனியா, வியாழன்

வவனியாவில் இருந்து கொழும்புக்கு அரிசி, மிளகாய் ஏற்றிச் சென்ற லொறி ஒன்று அந்த லொறியில் சென்ற மூவருடன் சேர்த்து எரிக்கப்பட்டுள்ளது

நேற்றுப் பிற்பகல் மிகிந்தலைக்கும், கற்குளத்துக்கும் இடையிலேயே இக்கோரச் சம்பவம் இடம் பெற்றது.

வவனியாமில் வீதியைச் சேர்ந்த பிரபல வர்த்தகர் ஒருவருக்குச் சொந்தமான இந்த லொறியை மறித்த காடையர் கோஷ்டி ஒன்று லொறியில் இருந்த அரிசி, மிளகாய் என்பவற்றை கொள்ளையடித்தபின் லொறியில் சென்ற மூவரையும் கொலை செய்து லொறியுடன் சேர்த்து எரித்துள்ளது.

3 பிள்ளைகளுக்கு தந்தையான லொறிச் சாரதி பெரியசாமி (வயது 38) கிளீனர் கொழும்பான் என்றழைக்கப்படும் ஜெகநாதன் (வயது 35) லொறி உரிமையாளரின் சகோதரனும் ஒரு பிள்ளைக்கு தந்தையுமான செல்வரத்தினம்

[8-ம் பக்கம் பார்க்க]

நிர்வாகம் தொடர்பான மறியல் போராட்டம் இடைநிறுத்தம்

— மாணவர் அமைப்புக்குழு

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ். பல்கலைக்கழக நிர்வாகத்தின் முன் தம்மால் வைக்கப்பட்ட கோரிக்கைகளில் பெரும்பாலானவை ஏற்றுக் கொள்ளப்பட்டதுடன் ஒரு சில கோரிக்கைகள் நிறைவேற்றுவதற்கு அனுசரனையாக நிர்வாகம் தொடர்பான மறியல் போராட்டத்தை தற்காலிகமாக இடைநிறுத்தி வைப்பதாகவும் குறிப்பிட்ட கோரிக்கை நிறைவேற்றப்

[4-ம் பக்கம் பார்க்க]

30 இளைஞர்கள் கைது

முல்லைத்தீவு, வியாழன்

சிலாவத்தைக்கிராமத்தை கடந்த செவ்வாய் அதிகாலை 5 மணியளவில் சுற்றிவளைத்த இராணுவம் 30 க்கும் அதிகமான இளைஞர்களை கைது செய்து இராணுவ முகாமுக்கு கூட்டிச் சென்றது.

அன்று மாலை வரை கைது செய்யப்பட்டவர்களில் 20 இளைஞர்கள் விடுதலை செய்யப்பட்டார்கள். ஏனைய பத்துப் பேரும் விசாரணைக்காக தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (சி)

வல்வையில்

படையினர் - புலிகள் 'ஷெல்' தாக்குதல்

வல்வெட்டித்துறை, வியா

வல் வெட்டித்துறை இராணுவ முகாமிலிருந்து கடந்த இரண்டு நாட்களாக இரவு பகலாக இடையிடையே மோட்டார் ஷெல். ஆர்ட்டிலறி ஷெல்போன்றவைஏவப்பட்டன.

இதனால் தோட்டங்களில் பயிர்கள் சேதமடைந்தும், வீடுகள் சில சேதமடைந்தும் உள்ளன. அதோடு எட்டு வயதுச்சிறுவன் ஒருவனும் காயமடைந்துள்ளார்.

இவர்களது தொடர்ச்சியான 'ஷெல்' தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் முகாமிலிருநது வெளிவந்த இராணுவத்தினரைத் தடுக்கும் பொருட்டும் கடந்த இரவுதமிழீழவிடுதலைப்புலிகள் வல்வை இராணுவ முகாம் நோக்கி இரண்டு தடவைகள் தாக்குதல் நடத்தினார்கள்.

வண்ணை

வைத்தீஸ்வர சுவாமி கோவில்

அருள்மிகு

தையல்நாயகி அம்பாள்

'திருப்பள்ளியெழுச்சி'-நூல்

இயற்றியவர்:

புலவர் ம. பார்வதிநாதசிவம்

ஈழநாடு வெளியீடு

கிடைக்குமிடம்:

வண்ணை

வைத்தீஸ்வர சுவாமி தேவஸ்தானம்,

யாழ்ப்பாணம்.

(A 1138)

வரி விளம்பரம்

விற்பனைக்கு

பலாலி வீதி. கோண்டாவில் சந்திக்கண்மையில் சகல வசதிகளுடன் கூடிய வீடுவளவு 3½ பரப்பு உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு வீ. த பாலசிங்கம், பலாலி வீதி, கோண்டாவில். (C-4060)

புதிய உழவு இயந்திர இணைப்புப்பெட்டி விற்பனைக்கு 32, சீனிவாசகம்வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம். C-4063

புதிய குளிர்சாதனப் பெட்டி (Genaral Japan) ஒன்று விற்பனைக்குண்டு 32, சீனிவாசகம் வீதி, கொட்டடி. யாழ்ப்பாணம். [C-4062]

குபோட்டா (Kubota) லான் மாஸ்டர் பெட்டியுடன் விற்பனைக்குண்டு. ம சிலுவை ராசா. 234 [76], ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். [C 4072]

வகுப்புகள்

வெளிநாடு செல்பவர்களுக்கு குறுகிய காலத்தில் Technical சான்றிதழ் பெறுவதற்கு வாய்ப்பு:- Electronic Engineering, Radio and T. V (Antenna, Deck), Electrical wiring, வெல்டிங், மோட்டர் வையின்டிங், மோட்டார்மெக்கானிசம், Typing [English], புதிய பிரிவுகள் 16-08-86 இல் ஆரம்பமாகின்றன. Vispa Engineering Aid Hall, (ஆனைப் பந்திச் சந்திக்கருகாமையில்) 328, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (C-4046)

Spoken English புதிய நாளாந்த / வார இறுதி வகுப்புகள். ஆரம்பம்: 18-8-86 நேரம் மாலை 4 - 5. சனி / ஞாயிறு16-8-86. நேரம் மாலை 3 - 5. ஆசிரியர்: S. B Iyar. 12, வைமன் வீதி. நல்லூர் [C-4011]

தேவை

வேப்பம் விதைகள் தொகையாகத் தேவை. தொடர்பு கொள்ளவும். மில்க்வைற், யாழ்ப்பாணம். (A 1135)

அரியாலை மகளிர் சங்கத்தில் பப்படச் செய்கையை ஆரம்பிப்பதற்கு இத்துறையில் அனுபவமும் ஆற்றலும் கொண்ட இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தகுதியானவர்கள் தமது விண்ணப்பத்துடன் அரியாலை மாம்பழம் சந்திக்கருகாமையில் இருக்கும் இலந்தைக்குளம் வீதியில் உள்ள மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கத்தில் 16-8-86-ந் திகதி பி. ப. 2-00 மணிக்கும் 4-00 மணிக்குமிடையில் சமுகம் கொடுக்கவும். அத்தேதியே தேர்வு நடைபெறும். ஏனைய விபரங்களை நேரில் பெற்றுக் கொள்ளலாம். தலைவி, அரியாலை மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கம். C 4057

சேவை

யாழ். நகரில் தெளிவான "போட்டோஸ்ரற்", "றோனியோ" பிரதிகளுக்கும், தமிழ்- ஆங்கில "ரைப்பிங்" வேலைகளுக்கும், 'கிளீன்கட்', 239, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். (C 4023)

பின்னுறுதிக் கட்டளை அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

வட்டுக்கோட்டை கிழக்கு என்னுமிடத்தைச்சேர்ந்த காலம்சென்ற கந்தையா இராசரத்தினம் என்பவரின்மரணசாதனம்எழுதப்பட்ட மரணச் சொத்துக்களின் விடயத்தில்

— மரணமெய்தியவர்.

மரணசாதன நியாயாதிக்கம் } இல.ரி/269.

கந்தையா இராசரத்தினம் கைம்பெண் ஜெயலட்சுமி "துவாரகா" கல்வளை சண்டிலிப்பாய்

— மனுதார்.

எதிர் பராயமற்றவர்கள்

1. இராசரத்தினம் மகள் மீனா
2. இராசரத்தினம் சேந்தன்.
3. இராசரத்தினம் தயாளன், அனைவரும் "துவாரகா" கல்வளை, சண்டிலிப்பாய்.
4. கந்தையா நவரத்தினம் (பராயமற்ற 1. 3ம் எதிர் மனுதார்கள் தங்கள் வழக்குப்பாதுகாவலர் 4ம் எதிர்மனுதார் மூலம் வட்டுக்கோட்டை.

எதிர்மனுதார்கள்.

மேலே இலக்கம் கொண்ட வழக்கு மேலே பெயர் குறிக்கப்பட்ட மரணமெய்திவரின் மரணச்சொத்துக்களை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1986 ம் ஆண்டு. ஆவணி மாதம் 27-ம் திகதி முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றான கட்டளையாக்கப்பட்டலாகாது என்பதற்கு காரணம்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப் படுகின்றனர் 1986 ஆண்டு ஆடி மாதம் 31 ம் திகதி இன்று தேதியிடப்பட்டது.

நீதிமன்றக் கட்டளைப்படி,
வி. இராமச்சந்திர ஐயா,
பதிவாளர்.

செல்வி
ச. அபிமன்னசிங்கம்,
மனுதாரின் சட்டத்தரணி.
(C 4056)

மோட்டர் திருட்டு

நெல்லியடி, வியாகரவெட்டி கிழக்கு ஓய்வு பெற்ற ஆசிரியர் திரு. எஸ் கந்தசாமி வீட்டில் இருந்து நேற்று முன்தினமிரவு மோட்டர் ஒன்று களவாடப்பட்டுள்ளது இதன் பெறுமதி 3000 ரூபா எனத் தெரிகிறது.

கலர் பிலிம் சுருள்களை PROCESSING + PRINTING செய்வதற்கு
கொழும்பு ஸ்ரூடியோ
(A 1041)

31-ம் நாள் நினைவஞ்சலி

திருமதி சவிராசி சவிரிமுத்து

மலர்வு: 25- 12- 1912
உதிர்வு: 16-7- 1986

எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்தி விட்டு இறைவனுடன் சங்கமித்த எம்குல விளக்கே என்றும் எம் நெஞ்சில் உங்கள் நினைவு மாறாது உங்கள் ஆத்மா சாந்தியடைய வேண்டிப் பிரார்த்திக்கிறோம்.

இவரது பிரிவால் துயருறும்,
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

விலாசம்: பி பெனடிக்ற், அண்ணா வீதி, நாரந்தனை. (C 4009)

யாழ்ப்பாண அக்கடமி
க. பொ. த. உயர்தர பரீட்சை
ஆகஸ்ட் 1987 மீட்டல் வகுப்புகள்

க. பொ. த உயர்தர பரீட்சைக்கு ஒருமுறையாவது தோற்றிய எவரும் இந்த மீட்டல் வகுப்பு ளில் சேரலாம். பாடத்திட்டம் முற்றாக மீட்டல் செய்யப்படும். சேர விரும்புவோர் அக்கடமி காரியாலயத்தில் உள்ள விண்ணப்பப் படிவங்களில் விண்ணப்பிக்கவும்.

வகுப்புகள் 10- 9- 86ல் ஆரம்பமாகின்றன.

அதிபர்,
376, பிரதான வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
தொபேசி எண்: 2 2 6 1 7
(A 1130)

அறிவித்தல்

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின்
வடபிராந்திய எரிபொருள்
விற்பனை முகவர்கள் கூட்டம்

காலம்: 16-8-86 நேரம்: 10-30 காலை
இடம்: 207, பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம்.
(Old Park Chinese Restaurant).

மேற்படி முகவர்கள் யாவரையும் தவறாது சமுகம் தரும்படி கேட்டுக்கொள்கிறோம்.

வடபிராந்திய எரிபொருள்
விற்பனை முகவர்கள் சங்கம்.
(C 4042)

பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரிப் பரீட்சை

B. A. 1986 டிசம்பர்
G. A. Q. 1987 ஏப்ரல்
மீட்டல் - வினா விடை வகுப்பு

பொருளியல்
S. வரதராஜன்

ஆரம்பம்: 16-8-86 சனி 2.00 p. m.

பொருளியல் கல்வி நிலையம்

200, பிரதான வீதி, சுண்டுக்குளி.
(C 4032) (சென். ஜோன்ஸ் கல்லூரி முன்பாக)

உதயம் தயாரிப்புகள்
தமிழ் மக்களின் சுகாதாரத்திற்கு
உத்தரவாதம் வழங்குகின்றன.

ரங்கா சீயக்காய் பவுடர்

இரசாயன சேர்க்கைகள் எதுவுமின்றி
இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட
சீயக்காய், வெந்தயம், சர்வதேச மூலிகைகள் கொண்டு தயாரிக்கப்படுவது 'ரங்கா' சீயக்காய் பவுடர் இயற்கை வளத்துக்கும், கேச வளர்ச்சிக்கும், தலை, கண், உறுப்புகளுக்கு ஆரோக்கியமும், வழங்குகிறது.

ரங்கா சீயக்காய் பவுடர்

ஆயுர்வேத டாக்டர்களால் உத்தரவாதம் வழங்குவது ரங்கா சீயக்காய் பவுடர்

தமிழ்மண் எங்கும் விற்பனையாகிறது
இது ஓர் சுதேச உற்பத்தி
[C 4069]

வெற்றுச் சாக்கு
கேள்விப் பத்திரம்

புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தால் கீழ் வரும் வகையான வெற்றுச்சாக்குகள் விற்பனைக்காக கேள்விப்பத்திரம் கோரப்படுகின்றது. கொள்வனவு செய்ய விரும்புவோர் தலைவர், புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் புலோலி கிழக்கு, பருத்தித்துறை என்ற முகவரிக்குப் பதிவுத்தபால் மூலம் 23-08-86ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக விண்ணப்பத்தை அனுப்பிவைக்கவேண்டும்.

சடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் "வெற்றுச் சாக்குக் கேள்விப்பத்திரம்" எனக் குறிப்பிட வேண்டும். கேள்விப்பத்திரத்துடன் மீளளிக்கும் வைப்புப் பணமாக ரூபா 250/- செலுத்துதல்வேண்டும். வைப்புப் பணம் இடாதோரின் கேள்விப் பத்திரம் எதுவித காரணத்தையிட்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது இதற்கான வைப்புப்பணத்தையும், விண்ணப்பப்படிவத்திற்கான ரூபா 5/-ஐயும் செலுத்தி விண்ணப்பப்படிவத்தை பெற்றுக்கொள்ளலாம். உரிய பணத்தை நேரடியாகவோ இன்றேல் தபால் காசுக் கட்டளை மூலமாகவோ அனுப்பிவைத்தால் கேள்விப்பத்திரம் உரியவருக்கு அனுப்பிவைக்கப்படும்.

வெற்றுச் சாக்கு விபரம்

01.	மா (பெரிது) (67 கி கி)	—	372
02.	மா (சிறிது) 55. 6 கி. கி)	—	581
03.	அரிசி நம். 1	—	167
04.	அரிசி 1 அந்தர்	—	549
05.	அரிசி 2 அந்தர்	—	57
06.	நவதானியம்	—	129
07.	சீனி	—	530
08.	இழக்கம்	—	607
09.	சர்க்கரை	—	33
10.	கற்கண்டு	—	09
11.	பை	—	16
	மொத்தம்		3050

சோ. அருணகிரி
பொதுமுகாமையாளர்.

திகதி: 1986-08-12
(A 1131)

மணிவாக்கு

அவசியம் காரணமாக என்னதான் கட்டாய நிலைமை இருந்தபோதிலும். புத்திசாலியானவன் தான் செய்பவைகள் எல்லாம் கட்டாயத்தின் பேரிலன்றி தன்னிச்சையாகவும் தனது சொந்த சுதந்திரமான எண்ணத்தின் படியுமே செய்வதாகக் காட்டிக்கொள்வான்.

— நிக்கலோ மாக்கியவல்லி:

நமது நோக்கு

ஐயகோ ஏன் இந்தக்கொடுமை!

அரசியல், பொருளாதார ரீதியான நெருக்கடிகளின் காரணமாக வெளிநாடுகளிலாகுதல் அமைதியாக வாழலாம் என்று புறப்பட்டுச் சென்றவர்களில் பெரும்பாலானவர்கள் எவ்வளவு சிரமங்களை எதிர்நோக்குகிறார்கள் என்பதை பத்திரிகைகள் பறைசாற்றுகின்றன.

வேலை வாய்ப்புகள் பெற்றுத் தருவதாக பெரும் பணத்தைவாங்கிக்கொண்டு வெளிநாட்டு தெருவீதிகளில் நிராதரவாக இளைஞர்களை கைவிட்டு மறைந்துவிடும் முகவர்களின் மோசடிகள் பற்றிய செய்திகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. அதே சமயம்பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி, கனடா, நெதர்லாந்து போன்ற நாடுகளில் அரசியல் தஞ்சம் கோரி சென்றுள்ளவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றிய தகவல்களும் வந்து கொண்டிருக்கின்றன.

வடக்கு கிழக்குமாகாணங்களில் இலங்கை இராணுவப்படைகளின் பயங்கரவாத நடவடிக்கைகளால் உயிரைமட்டும் கையில் பிடித்துக்கொண்டு வள்ளங்களில் ஏறி இந்தியாவின் கோடிக்கரைக்கும், இதர பாகங்களுக்குப் ஓடித்தப்பிய வர்களின் எண்ணிக்கை மாத்திரம் ஒருலட்சத்துக்கும் மேல் என்று கூறப்படுகின்றது. இடைநடுவில் இலங்கைக்கடற்படையினால் சுட்டுக்கொல்லப்பட்டு கடலுக்கிரையானவர்களின் எண்ணிக்கை எத்தனையோ!

இப்பொழுது கனடாவின் கரையிலிருந்து இலங்கை அகதிகள் பற்றிய மிகச் சோகமான தகவல் ஒன்று வந்துள்ளது.

ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் உட்பட சுமார் 150 பேர் உயிர்காக்கும்படகுகளில் தத்தளித்துக் கொண்டிருந்தபோது கனேடிய அதிகாரிகளின் கண்களில் பட்டு சரை சேர்க்கப்பட்டுள்ளார்கள். கப்பலொன்றிலிருந்து இவர்கள் பலவந்தமாக இறக்கிவிடப்பட்டதாகவும், அக்கப்பல் தனது பெயர்ப்பலகையை மாற்றிக்கொண்டு சென்று விட்டதாகவும் கூறப்படுகின்றது

இந்தியாவின் பல்பாகங்களிலிருந்தும். புறப்பட்டுச் சென்ற இலங்கை அகதிகள் இவர்கள் எனமூன்று கூறப்பட்ட போதிலும் இப்போது மேற்கு ஜெர்மனியிலிருந்து அமெரிக்கா நோக்கிப் புறப்பட்டவர்கள் இவர்கள் எனதெரிவிக்கப்படுகின்றது.

இவர்கள் பற்றிய சரியான விபரம் இனிமேல் தான் கிடைக்க வேண்டும்.

தாய்நாட்டில் தன்மானத்துடன் தொழில் புரிந்து வாழமுடியாத நிலையில் தமிழின மக்கள் எந்தெந்த தேசமெல்லாம் சென்று, எங்கெங்கோ கடல்களிலெல்லாம் தத்தளிக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் இருக்கிறார்கள் என்பதை இது எடுத்துக்காட்டும். வெளிநாடுகளில் சொகுசுடன் வாழலாம் எனப் புறப்பட்டவர்களில் பலரும்கூட இவ்வாறு துன்பத்துக்குள்ளாகியிருக்கலாம் என்பதும் உண்மையே!

எதுவானாலும் இங்கே சீரான அரசியல், சமூக பொருளாதார அமைப்புகள் இருக்குமானால் இவ்வாறு அயல்நாடுகளுக்குச் சென்று இவர்கள் அவலப்படும் நிலை ஏற்பட்டிருக்கமுடியாது இதற்கு இந்த நாட்டு அரசும், அரசியற் தலைவர்களுமே பொறுப்பேற்க வேண்டும்.

அயல் நாடுகளில் தமிழ் மக்கள் தஞ்சம் கோரி ஓடுவதை 'தமிழீழ தகிடுதத்தம்' என்று ஏளனமாகப் பேசியும் எழுதியும் வருபவர்கள் இந்த மக்களுக்கு இந்நிலை ஏன் ஏற்பட்டது என்பதை ஆலோசிப்பதில்லை.

ஆட்சி பீடத்தில் அமர்ந்திருக்கும் ஒரு சகோதரன் தனது இன்னொரு சகோதரனைத் தெருவில் துரத்திப் பிச்சை எடுக்கும் நிலைக்குத் தள்ளிவிட்டு அவனைப் பார்த்து ஏளனம் செய்வானானால் அதனால் ஏற்படும் அவமானம் யாருக்கு? நிச்சயமாக ஆட்சி பீடத்தில் அமர்ந்திருப்பவனுக்கே!

இதனை இன்றைய ஆட்சியாளர்கள் உணர வேண்டும்.

வெளி நாடுகளில் அகதி முகாம்களிலும் நடுக் கடலிலும் தத்தளித்துக் கொண்டிருக்கும் இந்நாட்டுத் தமிழ் மக்கள் இங்கு மகிழ்ச்சியுடன் திரும்பிவரவேண்டும் அதற்கான சூழ்நிலைகளை உருவாக்கவேண்டும்.

கனடாவுக்கருகில் நியூபவுன்லாந்துக் கரையில் தத்தளித்துக் கொண்டிருந்த இலங்கைத் தமிழர்களைத் திரும்பவும் இலங்கைக்கு அழைத்துவர இலங்கை அதிகாரிகள் முயற்சியெடுப்பதாகத் தெரிகின்றது இம்முயற்சி வெளிநாட்டவரின் கண்களில் மண்ணைத் தூவும் முயற்சியாக இருக்கலாகாது. அழைத்து வருகிறோம் எனக்கூறி அவர்களின் உடைமைகளைப் பறிமுதல் செய்வதோ, இளைஞர்களைப் பிடித்து காராகிருகத்தில் அடைப்பதோ அதிகாரிகளின் யோசனையாக இருக்கலாம்.

கனேடிய அதிகாரிகளின் பொறுப்பிலேயே இப்பொழுது அவர்கள் இருக்கிறார்கள். இங்கு சீரான நிலைமைகள் உருவாகும் வரை அம்மக்களை மனிதாபிமான அடிப்படையில் அங்கேயே கனேடிய அரசு வைத்திருக்கவேண்டும். இதுவே அவர்களுக்கு இந்த இக்கட்டான நிலையில் கனடா செய்யக்கூடிய பெரிய உதவியாயிருக்கும்.

இன்று இந்தியாவின் 39-வது சுதந்திரதினம்———

பல வளம் - பலகளம் கண்ட இந்திய சுதந்திர தேவி

இந்திய தேசம், பிரிட்டிஷாரிடமிருந்து சுதந்திரம் பெற்று இன்று 39 ஆண்டுகள் பூர்த்தியடைந்துள்ளன.

இந்திய தேசம் அந்நிய ஏகாதிபத்திய வாதிகளிடமிருந்து சுதந்திரம்பெற முக்கியமானவர்களாக விருந்த மகாத்மா காந்தி, பண்டிட் ஜவஹர்லால் நேரு ஆகியோர் கனவுகண்ட சுதந்திர இந்தியா இன்று நிஜமாகப் பரிணமித்துள்ளதா?

உலகின் சகல நாடுகளுடன் நட்புரிமையுடன் வாழவேண்டும்; 2ம் உலகப் போரின பின்னர் அமெரிக்கா, ரஷ்யா என்ற இரு வல்லரசுகளிடையே சகல நாடுகளும் சிக்கிப் பிரிந்து பிளவுண்டு போய்விடாதிருக்க அரும்பாடுபட்ட சுதந்திர இந்தியாவின் முதற் பிரதமர் நேரு, தமது 'பஞ்சசீலக் கொள்கை' தமது வாழ்நாளிலேயே தளர்வுறுவதைக் காணவேண்டிய நிலை ஏற்பட்டது. உலக நாடுகள் வெறுத்த எந்த சீனாவை அவர் ஆதரித்தாரோ அதே சீனதான் அவரது கொள்கையை மண்ணைக்கியது.

மேற்குப் பாகிஸ்தானிய (இப்போது வெறுமனே பாகிஸ்தான்) ஆட்சியாளர்கள் கிழக்குப் பாகிஸ்தானின் (இப்போது பங்களாதேஷ்) வங்காளி மக்களை எண்ணற்ற துன்பங்களுக்காளாக்கினர். அம்மக்கள் தாங்கொணாத் துன்பங்களுக்காளாகுவதைப் பொறுக்கமாட்டாத இந்தியா, தனது படைகளை அனுப்பி கிழக்குப் பாகிஸ்தானை மேற்குப் பாகிஸ்தானிடமிருந்து பிரித்து வங்காள மக்களின் விருப்பம்போல பங்களாதேஷை உருவாக்கிக் கொடுத்தது.

ஆனால் இன்று.....?

எந்த நாட்டு மக்களுக்காக யுத்தமொன்றை இந்தியா நடத்தியதோ அதே நாட்டுத் தலைவர்கள் இந்தியாவை எதிரிகளாகக் கணிக்கின்றனர். தமது மக்களைக் கொன்று குவித்த பாகிஸ்தானுடன் மூன்று உடன்படிக்கைகளை அண்மையில் செய்துகொண்டார் இன்றைய பங்களாதேஷ் ஜனாதிபதி!

இந்தியா சுதந்திரம்பெற்ற சம்பவத்தை நோக்குகையில், அது வன்முறையையும், பிரிவினையையும் கூடவே அழைத்துக்கொண்டுவந்தது தெளிவாகப் புரியும்.

பாரத உபகண்டத்திலிருந்து இந்திய - பாகிஸ்தான் பிரிவும், அதனைத் தொடர்ந்து இந்து-முஸ்லிம் கலவரங்களும் இந்திய சுதந்திரத்துடன் கூடவே வந்தன.

இ. செந்தில்

56-ம் ஆண்டில் இந்திய தேசம் மொழி ரீதியிலான மாநிலங்களாகவும், யூனியன் பிரதேசங்களாகவும் பிரிக்கப்பட்டு, மாநில, மத்திய அரசு முறைகளின் கீழ்க் கொண்டு வரப்பட்டது. மொழி ரீதியாக மாநிலங்களைப் பிரிப்பதனால், அந்தந்த மொழிகளைப் பேசுபவர்களை ஒன்றுசேர்ப்பதன் மூலம் இந்தியாவை இலகுவாக அபிவிருத்தியடையச் செய்யலாம்; மக்களை ஒற்றுமைப் டுத்தலாமென்ற காரணங்களுக்காக அவ்வாறு செய்யப்படுவதாக அப்போது கூறப்பட்டது.

ஆனால் நடப்பதென்ன?

பஞ்சாப் ஒரு பக்கம்; அஸ்ஸாம் ஒரு பக்கம் எனப் பிரிவினைவாதம் கிளம்பியுள்ளன.

இந்தியாவும் சீனவும்

மனிதர்கள் எவ்வாறு தமது குணத்தை மாற்றிக்கொள்ளக் கூடியவர்கள் என்பதற்கு ஒரு சிறந்த உதாரணம் சீனா உலக சமுதாயத்தில் சீனா தனிமைப் படுத்தப்படக்கூடாது; ஒன்று சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும் எனச் சீனாவின் சார்பில் அன்று வாதாடியவர் நேரு. ஆனால் அவரது காலத்திலேயே இந்தியாவின்மீது சீனா படையெடுத்ததென்றால்..... படையெடுத்தது மட்டுமன்றி இந்திய மண்ணில் சிலவற்றையும் கைப்பற்றியது. இந்தியாவுக்குப் பலம்வாய்ந்த இராணுவம் தேவையென்பதனை நேருவுக்கு உணர்த்தியது சீனாவின் கையிலை இந்தியா அடைந்த தோல்வியே எனச் சில ஆரசியல் நிபுணர்கள் கூறுகின்றனர்.

இந்த இந்திய - சீன எல்லைத் தகராறு இப்போது மீண்டும் ஆரம்பித்துள்ளது இந்தியாவின் ஒரு மாநிலமான அருணாசலப் பிரதேசத்தினுள் சீனா ஊடுருவியிருப்பதாகவும், ஹெலிகொப்டர் இறங்குதளம் ஒன்றைச் சீனா அமைத்துள்ளதாகவும் இந்தியா குற்றம் சுமத்தியுள்ளது.

எல்லை நாடுகளும் பிரச்சினைகளும்

இந்தியாவையும் அதனைச் சுற்றியுள்ள அயல்நாடுகளையும் பொறுத்தளவில் குறிப்பிடத்தக்க அம்சம் யாதெனில், அந்த நாடுகளில் வாழும் இன, மொழி மக்கள் இந்தியாவிலும் வாழ்கின்றனர் என்பதேயாம். இந்த விசேட அம்சம் உண்மையில் இந்தியாவையும் அதன் அயல்நாடுகளையும் ஒற்றுமைப் படுத்தியிருக்க வேண்டும். ஆனால் துரதிர்ஷ்டவசமாக அது நடக்கவில்லை மாறாக இந்தியாவின் எல்லைப்புற மாநிலங்களின் பிரிவினை கோரும் பிரிவினை வாதிகளுக்கு அந்தந்த எல்லைப்புற மாநிலங்களையொட்டிய நாடுகள் உதவியளிக்கின்றன உதாரணமாக, பஞ்சாப் பின் சீக்கிய தீவிரவாதிகளுக்கு பாகிஸ்தானின் உதவி; நாகலாந்து, மணிப்பூர் பிரிவினை வாதிகளுக்கு பர்மா உதவி.

இவ்வாறு நாம் நோக்குகையில் இலங்கையையும், பூட்டானையும் தவிர இந்தியாவின் ஏனைய அயல்நாடுகள் இந்தியாவின் ஐக்கியத்தைக் குலைக்க முயலும் சக்திகளுக்கு உதவி செய்கின்றன என்பதே உண்மை.

இந்தியாவுக்கு, பாகிஸ்தானுடன் பஞ்சாப் விஷயத்தில் மட்டுமன்றி காஷ்மீர் விஷயத்திலும் கருத்து வேறுபாடுகளுண்டு இந்த மாவட்டத்துக்காக இருநாடுகளும் இருயுத்தங்களையே நடத்தியுள்ளன.

இந்தியாவுக்கும் அயல்நாடுகளுக்கும் இடையேயான மேற் கூறப்பட்ட பிரச்சினைகள் மற்றும் தற்போது தோன்றியுள்ள பல்வேறு பிரச்சினைகளும் இந்தியாவிற்கு எளிதில்தீர்த்து வைக்கப்படக் கூடியவையல்ல. ஏனெனில் இவற்றைத் தீர்ப்

{4-ம் பக்கம் பார்க்க}

மக்கள் கருத்து

தலைமறைவாகவில்லை

10 8-86 திகதி ஞாயிறு ஈழநாடு பத்திரிகையில்மூன்பக்கச் செய்தியாக 20 போதகர்கள் தலைமறைவு என்றசெய்தி வெளியிடப்பட்டிருந்தது.

நெதர்லாந்து நாட்டிலுள்ள அம்ஸ்ரடாம் நகரில் நடைபெற்ற இரண்டாவது சுவிசேசகர் மகாநாட்டில் இலங்கையிலிருந்து 103 சுவிசேஷ ஊழியர்கள் பங்குபற்றினர்கள் அதில் நானும் ஒரு சுவிசேஷ ஊழியராகபங்கு பற்றினேன் இங்கிருந்து 11ம் திகதி புறப்பட்டு 23ம் திகதி அம்ஸரடாம் நகரிலிருந்து திரும்பி வந்தோம்

இலங்கையிலிருந்து மகாநாட்டிற்குச் சென்ற அனைவரும் மகாநாட்டில் பங்கு பற்றினர்கள் மகாநாடு முடிந்த பின்னர் சில சுவிசேஷகர்கள் தங்களுடைய ஊழியர்களை விருத்தி செய்வதிற்காக வேறு நாடுகளிலுள்ள தமது உடன் ஊழியர்களின் அழைப்பைப் பெற்று உரிய விசா பெற்று வேறுசில நாடுகளுக்குச் சென்றுள்ளார்கள். ஆகவே அவர்கள் தலைமறைவு ஆகவில்லை. தமது ஊழியங்களை பிற நாடுகளுக்கும் பரப்பும் முகமாகவே சென்றிருக்கிறார்கள் என்பதை தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

செ. துரைசிங்கம்,
கல்வித்திணைக்களம்,
யாழ்ப்பாணம்.

அளவெட்டி ஸ்ரீ நாகவரதநாராயணர் திருவிழா

யாழ்ப்பாணம், வெள்ளி.

அளவெட்டி ஸ்ரீ நாகவரதநாராயணர் ஆலய திருவிழா இம்மாதம் 18ம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

27ம் திகதி புதன்கிழமை தேர்த் திருவிழாவும், 28ம் திகதி வியாழக்கிழமை தீர்த்தத் திருவிழாவும், 29ம் திகதி வெள்ளிக்கிழமை திருப்பொன் ஊஞ்சலும் நிகழும்.

நல்லை ஞான வேள்

சோதி மயமான சுந்தரஞ்சேர் நல்லூரிற்
சோதிப் பிழம்பாகத் தோன்றுகின்ற - சோதில்லாத்
தெய்வானை வள்ளி சேரவிரு பாங்கிருத்தி
உய்விப்பான் பொய்யல்ல உண்மை.

★

ஞானப் பிரகாசம் ஞாலத்திற் கீந்துவந்த
ஞானப் பிரகாசன் வாழ்ந்தநல்லை - ஞானவேள்
சிந்தை தனிலிருத்திச் சேவிக்குஞ் செம்மையர்க்கே
முந்தை வினையறுப்பான் முந்து.

★

ஞான ஒளிகாலும் நல்லைப் பதிமேவும்
ஞான ஒளிகாலும் நற்குகனைத் - தேனவிழும்
வள்ளிதெய் வானையொடு வாயார வாழ்த்துவர்க்கே
அள்ளிப் பொழிவான் அருள்.

— கவியரசு வெண்பாமணி முருகசூரியன்

[இன்று நல்லைக் கந்தன் 6-ம் திருவிழா]

இந்திய சுதந்திர...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பதற்குரிய அணுகுமுறையை உருவாக்குவதில் சிக்கலே இந்தியா எதிர்நோக்க வேண்டியுள்ளது.

உதாரணமாக இப்பிரச்சினைகளை இந்தியா தனது ராணுவ பூகோளரீதியான பலத்துடன் தீர்க்க முனைந்தால் ஒருபெரிய அண்ணனின் வில்லங்கப்போக்குடன் [Big brother aitiude] இந்தியா நடந்துகொள்கிறது என்ற குற்றச்சாட்டு, மாறுகசாத்வீகமான முறையில் இந்தியா தீர்க்க முயன்றால், அதை இந்தியாவின் பல வீனமாக எடுத்துக் கொண்டு இந்தியாவை ஏமாற்றப்பார்க்கின்றன.

இந்தியாவின் அயல்நாடுகள் தான் நேரு, காந்தியின் கொள்கைகளை மண்ணைக் செய்தனவென்றால், உள்நாட்டுத் தலைவர்கள்கூட நேருவும் காந்தியும் கண்ட உண்மையான சுதந்திர இந்தியக் கனவை நனவாக்க முயலவில்லை.

அதன் விளைவாக இன்று இந்தியா எங்கிலும் ஊழலும், அதிகார துஷ்பிரயோகமும் மலிந்து காணப்படுகின்றன. அரசியல் கட்சித் தலைவர்கள் மக்களை இன, மத, மொழி ரீதியாகப் பிரித்து விட்டு வாக்குப்பெற முயல்கின்றனர். அதன் விளைவுதான் இன்றைய பஞ்சாப் பிரச்சினை.

ஒரு நாணத்துக்கு இரு பக்கங்கள். நாம் இதுவரை பார்த்தது இந்தியாவெனும் நாணயத்தின் ஒரு பக்கத்தையே.

மறுபக்கத்தில், இந்த 39 ஆண்டுக் காலத்தில் இந்தியா அடைந்த அபிவிருத்திகள், முன்னேற்றங்கள் காணப்படுகின்றன.

இந்திய பொருளாதார, அபிவிருத்தித் திட்டங்கள் எத்துறையிலும் தன்னிறைவு அடைதலைக் குறிக்கோளாக வைத்து, அந்தந்தத்துறை நிபுணர்களினால் அரசியல் தலையீடின்றி தீட்டப்பட்ட ஐந்தாண்டு பத்தாண்டுத் திட்டங்களாகும்.

விவசாய கால்நடை உற்பத்தியை பெருக்குவதற்காக பல்வேறு முயற்சிகள் சுதந்திரத்தின் பின் எடுக்கப்பட்டன. விவசாயத்தில் ஈடுபடுவோருக்கு பல்வகை உதவிகளும், உற்பத்தியை எவ்வாறு பெருக்குவது என்ற அறிவுறுத்தல்களும் நாடளாவிய ரீதியில் வழங்கப்பட்டன. அதிகவிளைச்சலைத்தரக்கூடிய பயிரினங்களைக் கண்டு பிடிக்க ஆராய்ச்சியாளர்கள் ஊக்குவிக்கப்பட்டனர்.

அதன் விளைவு.....? இன்று இந்தியா உணவுற்பத்தியில் தன்னிறைவு அடைந்துள்ளது.

ஒரு நாட்டின் அபிவிருத்திக்கு விவசாயத் துறையுடன் கைத் தொழிற்றுறையில் அபிவிருத்தித்தியும் முக்கியம். இன்று இந்தியா குண்டூசி முதல் போயிங் விமானம் வரை தனது நாட்டில் தயாரிக்குமளவு ஆற்றலைப் பெற்றுள்ளது யாவரும் அறிந்த உண்மை. விண் வெளிக்கு செய்மதிகளை அனுப்புமளவிற்கு இந்திய விஞ்ஞானம் உயர்ந்துள்ளது.

இவற்றையெல்லாம் விட நேரு, இந்திரா காந்தி, ராஜீவ் போன்ற உலகளாவிய ரீதியில் மதிக்கப் பெற்ற அரசியல் தலைவர்களையும், திரு. மேனன், ஜி. பார்த்தசாரதி போன்ற தலைசிறந்த ராஜதந்திரிகளையும் பாபா, சந்திரசேகர் போன்ற உலகப் புகழ் பெற்ற விஞ்ஞானிகளையும். ரவிசங்கர், சத்திய ஜித் ரே, ஷியாம் பெனகல் போன்ற கலைஞர்களையும் உலகுக்கறிமுகப்படுத்தியது இந்த சுதந்திர இந்தியாதான்.

அன்றைப் போதிக்கும் இந்து, பௌத்த சமயங்களையும் வானியற், பரத கலைகளையும் இந்த உலகுக் களித்த பூமியல்லவா அது!

இந்தப் பாரம்பரியம் தான், புனிதம் தான் இந்தியாவுக்குப் பின்னல் உள்ளது; அதன் முன்னேற்றத்துக்கும் பின்னல் உள்ளது. 39 வருட கால சுதந்திர வரலாற்றில் இந்தியா எனும் மாபெரும் நாடு பல்வேறு சிறு நாடுகளாகப் பிரிந்து விடாமல் காப்பாற்றியது.

எத்தனை பாகிஸ்தான்கள், சீனக்கள் வந்தாலென்ன, எத்தனை பஞ்சாப்கள் வந்தாலென்ன எத்தனை பிந்திரன்வாலேக்கள் பிறந்தாலென்ன, எத்தனையோ ராஜீவ் காந்திகளையும், எத்தனையோ அருண் வைத்தியாக்களை (இந்தியாவின் தலை சிறந்த இராணுவ வீரர்) உருவாக்கப் போவதும் இதுவே!

13 உ. அ. அதிபர் பிரிவுக்கு வரட்சி நிவாரண உணவு முத்திரைகள் அனுப்பப்பட்டன

சுண்டிக்குளி, வியாழன் வரட்சி நிவாரண உணவு முத்திரைகள் தற்பொழுது யாழ். சமூகசேவைப் பகுதியினரால் யாழ்.மாவட்டத்திலுள்ள 13 உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இந்த உணவு முத்திரைகளை கடந்த ஜூன் மாதம் முதல் 1987ம் ஆண்டு மே மாதம் வரை பாவிக்கமுடியுமென கூறப்படுகின்றது.

ஒவ்வொரு உணவுமுத்திரைகளிலிருந்தும் ஒவ்வொரு மாதமும் 1 புள்ளிகள் மாத்திரமே பாவிக்கமுடியும். இவைகளை முன்னர் உணவுத்திணைக்களத்தினரால் வழங்கப்பட்ட பொழுது ஒவ்வொருமாதமும் இரு புள்ளிகள் பாவிக்கப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

இவைகளின் பெறுமதியும் முன்பு உள்ளவைகளைப் போலவே உள்ளது. இதன்பிரகாரம் உணவுமுத்திரை பெறத்தகுதியுடைய ஒவ்வொருவருக்கும் வயதுப் பிரமாணம் கீழ்கண்ட பெறுமதியுடைய முத்திரைகள் வழங்கப்படவுள்ளன.

8வயது வரையுள்ள பிள்ளைகளுக்கு 25 ரூபா பெறுமதியுடைய முத்திரையும் 8வயது முதல் 12 வயதுக்கு இடைப்பட்டவர்களுக்கு 20 ரூபா பெறுமதியுடைய முத்திரையும் 12 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு 15 ரூபா முத்திரைகளுமே வழங்கப்படும்.

இத்துடன் மின்சார வசதி இல்லாத குடும்பங்களுக்கு 21 ரூ 73சதம்பெறுமதியுடைய மண்ணெண்ணெய் முத்திரையும் வழங்கப்படும்.

இவ்வுணவு முத்திரைகள் உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களினூல் பாவனையாளர்களுக்கு இம் மாதம் வழங்கப்பட்டபின் அவர்கள் ஜூன் மாதத்திலிருந்து இம் மாதம் வரையுள்ள 3 மாத பொருள்களையும் ஒரே தடவைகளில் பெற்றுக் கொள்ள முடியுமென்றும் யாழ் சமூக சேவைப் பகுதி உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார். (எ)

எம். ஜி. ஆர்.---

[1ம் பக்கத் தொடர்ச்சி]

றியடைந்து தமிழ் மக்கள் சுதந்திரமாகவும், கௌரவமாகவும் வாழ வழி ஏற்படும்'' என்று தமிழ் நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் தமது சுதந்திரதினச் செய்தியில் நம்பிக்கை தெரிவித்துள்ளார். [எ]

வட - கிழக்கு---

[1ம் பக்கத் தொடர்ச்சி]

ளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம், திரு. ஆர். சம்பந்தன், திரு. வீ. ஆனந்தசங்கரி, திரு. வி. யோகேஸ்வரன், திரு. ஏ. தங்கத்துரை, வண. யோசப் அல்போன்சோ ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

இவர்களுடன் பேச்சுக்களின் போது டாக்டர் நீலன் திருச்செல்வம், இரா. சம்பந்தமூர்த்தி, திரு. பி. சூசைதாஸன் ஆகியோரும் கலந்து கொள்வார்கள்.

சென்னையிலிருந்துகொழும்பு வந்து சேர்ந்த கூட்டணிக்குழுவினர் நேற்றிரவு தங்கியிருந்த ஹோட்டலில் அவசரமாகக் கூட்டமொன்றைக்கூடி தமது யோசனைகள்குறித்து ஆராய்ந்தனர். வடக்கு - கிழக்கு இணைப்பு குறித்து கூட்டணி குழு வலியுறுத்தும் என்று நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. [ஊ-எ]

நிர்வாகம்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

படும்வரை விரிவுரைகளைப் பகிஷ்கரிப்பதன் மூலம் போராட்டம் தொடரவுள்ளதாகவும் யாழ். பல்கலைக்கழக மாணவர் அமைப்புக்குழு அறிவித்துள்ளது

இதுசம்பந்தமாக அக்குழு விடுத்துள்ள அறிக்கையில், கடந்த ஒருவாரகாலமாக யாழ். பல்கலைக்கழக மாணவர்களினூல் மேற்கொள்ளப்பட்ட வெகுஜனப் போராட்டம் இன்று தமது கோரிக்கைகள் தொடர்பாக நிர்வாகம் கொடுத்திருக்கும் உத்தரவாதத்தைத் தொடர்ந்து வெற்றியளித்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

போராட்டத்தில் ஏறிபட்டிருக்கும் முன்னேற்றகரமான திருப்பு முனையான ஒன்று பட்ட மாணவ வெகுஜன சக்தியின் பலத்தை நிரூபித்துள்ளமையையிட்டு தாம் மகிழ்ச்சி அடைவதாகவும் அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது இவ்வாறிருக்க யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று மேற்கொள்ளவிருந்த ஒருநாள் அடையான உண்ணாவிரதம் நடைபெறவில்லை.

(மா)

75 பேர் கைது!

[மட்டக்களப்பு நிருபர்]

கல்குடாத்தொகுதி லுள்ள வந்தாறுமூலைப்பகுதியை திடீரென சுற்றிவளைத்து தேடுதல் நடத்திய அதிரடிப்படையினர் 75 பேரைக் கைதுசெய்துள்ளனர்.

நேற்றுக்காலை இச்சம்பவம் இடம்பெற்றது. [மா]

உற்சவம்

வல்வெட்டித்துறை, வியாபாரி மூலை இன்பருட்டி பிள்ளையார்கோவில் வருடாந்த மகோற்சவம் கடந்த ஞாயிற்றுக் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. 18-ம் திகதி ரதோற்சவமும் 19-ம் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறும். [ஏ]

வெள்ளோட்ட விழா

யாழ்ப்பாணம், வெள்ளி நவாலியூர் அருள்மிகு அந்திரான் முருகமூர்த்தி தேவஸ்தான பெரிய சப்பற வெள்ளோட்டவிழா நாளை மறுநாள் ஞாயிற்றுக்கிழமைமாலை நடைபெறும். [இ]

செவ்வாய் கிரகணம்

யாழ்ப்பாணம், வெள்ளி இன்று இரவு 16ம் திகதி 9-30 மணியளவில் செவ்வாய் கிரகம் சந்திரனால் மறைக்கப்படும். இதனை எல்லோராலும் பார்க்க கலாம் என யாழ் வானியற் கழகம் அறிவித்துள்ளது.

உதைபந்தாட்டம்: சென். மேரிஸ் வெற்றி

யாழ்ப்பாணம், வெள்ளி யாழ் உதைபந்தாட்ட லீக்கின் 'நொக்கவுட்' உதைபந்தாட்டப் போட்டியின் 'ஏ' பிரிவில் நாவாந்துறை சென். மேரிஸ் கழகமும், கொக்குவில் பொற்பதி ஐக்கிய கழகமும் இறுதியாட்டத்துக்கு தெரிவாகியுள்ளன.

சென். மேரிஸ் கழகத்துக்கும், கிறீன்பீல்ட் கழகத்துக்குமிடையில் நடைபெற்ற அரையிறுதிப் போட்டியில் சென். மேரிஸ் கழகம் 3—1 கோல்களால் வெற்றி பெற்றது.

பொற்பதி கழகத்துடன் மற்றுமொரு அரைஇறுதிஆட்டத்தில் மோதவிருந்த யாழ். முஸ்லிம் கழகம் குறிப்பிட்ட நேரத்துக்கு மைதானத்துக்கு வராததினூல், பொற்பதி கழகத்துக்கு வெற்றி வழங்கப்பட்டது.

இறுதியாட்டங்கள் இம்மாத இறுதியில் நடைபெறும். (வி)

குழாய் நீர் விநியோகம் சீராகும்

யாழ்ப்பாணம், வெள்ளி: யாழ் நகரில் கடந்த நான்கு தினங்களாக தடைப்பட்டுள்ள குழாய்நீர் விநியோகம் இன்று சீராகும் என்று யாழ் மாநகர சபை ஆணையாளர் திரு. சி. வீ. கே. சிவஞானம் தெரிவித்தார்.

கடந்த திங்கட்கிழமை மணிக்கூட்டு வீதியில் 'ஷெல்' விழுந்ததால் 8 அடி 'பைப்' உடைந்ததை தொடர்ந்து குழாய்நீர் விநியோகம் தடைப்பட்டது. கடந்த இருநாட்களாக இந்த பைப் திருத்த வேலை நடைபெற்றது. இன்று வழக்கம் போல் குழாய்நீர் விநியோகம் நடைபெறும். (க)

கடைசி நேர வரி விளம்பரம்

தேவை

அனுபவம் பெற்ற தமிழ் சுருக்கெழுத்தாளர் உடனே தேவை, நகர சபை எல்லைக்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். இருபாலரும் விண்ணப்பிக்கலாம். முடிவு திகதி 22 - 8 - 86 விளம்பர இல A 1141 C/o ஈழநாடு யாழ்ப்பாணம். [A 1141]

விடோ

காலை 10-30, 2-30, 6-30

Dragon Lee-Aa Golden Dragon
Johnnie Chan- As Silver Snake
in
GOLDEN DRAGON SILVER SNAKE
(Karate, Action, Thrills and Color)
Showing first time in Jaffna.

கடைசி வாரம்

வெலிங்டன்

வெண்திரையில்

10-30, 2-30, 6-30

இனிய பாடல்கள் அதி பயங்கர சண்டைகள், தந்திர காட்சிகள், நகைச்சுவை நிறைந்த

சிவாஜி, ஜமுனா வீரப்பா, நம்பியார்

தங்கமலை ரகசியம்

[புத்தம் புதிய பிரதி] இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்டது.

வின்ஸர் திரையில்

10-30, 2-00, 4-30, 7-00

மீண்டும் காட்சியளிக்கின்றன் காரட்டி மாவீரன் புறூஸ்லி. நவீன பாணியில் அதிரடிக் கராட்டிச் சண்டைகள் முரட்டுக்காளையுடன் கனல்மிகுகராட்டிப்பார்திகில் தீரவீரமிக்க மோட்டார் சைக்கிள் மோதல்கள் திடுக்கிடவைக்கும் CIA இன் தந்திர சாமர்த்தியங்கள் இவை அத்தனையும் நிறைந்த

'CHALLENGE'

''சவால்''

புதிய வெளியீடு

★ கனடா
★ டென்மார்க்
★ ஜேர்மனி

★ கனடா செல்ல விரும்புவோர்க்கு ஓர் அரிய சந்தர்ப்பம். எமது முகவர் உங்களை கனடா வரை நேரடியாக அழைத்துச் செல்வார்.

★ மீண்டும் நாம் டென்மார்க் பயணம் ஆரம்பித்துள்ளோம். எமது முகவர் தங்களை டென்மார்க் அழைத்துச் செல்வார். வாரா வாரம் எமது பிரயாண ஒழுங்குகள் நடைபெறும் என்பதையும் அறியத்தருகின்றோம்.

★ ஜேர்மன் நாட்டிற்கு செல்ல விரும்புவோருக்கும் பிரயாண ஒழுங்கு செய்து தரப்படும்.

உடன் தொடர்புகொள்ளவும்.

பாஸ்போர்ட், பொன்ட் ஆகியனவும் செய்துதரப்படும்.

தொடர்பு:-

N. BALA

பஸ் வழி இல. 764 பலாலி வீதி, கோண்டாவில்.

திருச்செல்வம் வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

(C-4076)

சனசமூகநிலைய உதவிப்பணம்

மாவிட்டபுரம், வியா. வலி வடக்கில் கடந்தமூன்று ஆண்டுகளாக வழங்கப்படாமலிருந்த சனசமூக நிலையங்களுக்கான உதவிப்பணம் இம்மாத இறுதிக்குள் வழங்கப்பட உள்ளது.

உள்ளூராட்சிப் பகுதியினுள் சனசமூக நிலையங்களுக்கு வருடாந்தம் வழங்கப்பட்டுவந்த உதவிப்பணம் வலி வடக்கிலுள்ள சனசமூகநிலையங்களுக்கு 1983ம் ஆண்டிலிருந்து வழங்கப்படாமையால் சனசமூக நிலையங்களின் பணிகள் பாதிக்கப்பட்டிருந்தன.

இதுகுறித்து காங்கேசன் துறை உபஅலுவலக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் த மகாலிங்கம் சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்பு கொண்டு இந்த உதவிப்பணம் விரைவில் வழங்கப்பட வேண்டுமென கோரியிருந்தார்

இதையடுத்து உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் சிபார்சின்பேரில் மூன்றுவருட உதவிப்பணம் ஒன்றுசேர்த்து இம்மாத முடிவுக்குள் சனசமூக நிலையங்களுக்கு வழங்கப்பட உள்ளது. [எ]

இலவச பாடசாலை

நெல்லியடி, வியா. கரவெட்டி புதுத்தோட்டமென்னும் பகுதியில் அமைந்துள்ள அகதிகள் முகாமொன்றிலுள்ள அகதிகளின் குழந்தைகளுக்கு இலவசப் பாலர் பாடசாலையொன்றை அம்முகாமுக்குப் பொறுப்பாகவுள்ள ஒய்வுபெற்ற அரசாங்க உத்தியோகத்தர் திரு எஸ். சிவசம்பு அமைத்துக் கொடுத்துள்ளார்.

இம் முகாமிலுள்ள அகதிகளின் சகல தேவைகளையும் பூர்த்தி செய்வதற்கு ஒத்துழைப்பு வழங்குவதாக கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் திரு ஏ ஜயாத்துரை இணங்கியுள்ளார். [ஏ]

சமய அறிவுப் போட்டி

நயினாதீவு, வியா. நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய வருடாந்த உற்சவத்தையொட்டி கடந்த ஒன்பது ஆண்டுகளாக நடைபெற்றுவந்த சமய அறிவுப் போட்டி தவிர்க்கமுடியாத காரணத்தால் இம்முறைநடைபெறவில்லை.

இச்சமய அறிவுப் போட்டியை நயினை மத்திய சனசமூக நிலையத்தினர் நடத்தி வந்தது தெரிந்ததே. (இ)

'நியாயத்துக்கு வாதாடியவர்

மானிப்பாய், வியாழன் 'சிவனே முழுமுதலாகக் கொண்டு சிவநெறியைப் பரப்பியவர் சுந்தரர். இறைவனுடன் கூட நியாயத்துக்காக வாதாடி அவனிடமே அடைக்கலம் தேடியவர் அவர்.' இவ்வாறு மானிப்பாய் வடகிழக்கு ஆனந்தன் வைரவர் ஆலய முன்றலில் நடைபெற்ற சுந்தரர் குருபூசையில் சிறப்புப் பேச்சாளராகக் கலந்து உரை நிகழ்த்திய சைவப்புலவர் திரு எம் ஸ்ரீதயாளன் கூறினார்

திரு ஸ்ரீதயாளன் மேலும் பேசுகையில்,

''சுந்தரரது குடும்ப விவகாரங்களில்கூட இறைவன் எவ்விதம் தலையிட்டு நல்ல தீர்வு கண்டார் என்பதை நாம் சுந்தரமூர்த்திநாயனாரது வரலாற்றிலிருந்து அறியக் கூடியதாகஇருக்கின்றது'' என்றார்

மானிப்பாய் இந்துசமயவிருத்திச்சங்கத்தலைவர் திரு க செல்லத்துரை தலைமையில் இக்குருபூசை நடைபெற்றது. [சி]

வடமாகாண மருத்துவக்கல்லூரி நேர்முகப்பரீட்சை

யாழ்ப்பாணம், வெள்ளி வட மாகாண மருத்துவக் கல்லூரிக்கு, புதிய மாணவர்களை தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை நடைபெறுவதற்கு முன்பு, சென்ற வருடம் விண்ணப்பித்த மாணவர் தொகையைக் காட்டிலும் கூடுதலான மாணவர்கள் விண்ணப்பிக்கலாம் என தாம் எதிர்பார்ப்பதாகவும், மேற்படி மருத்துவக் கல்லூரியின் செயலாளர் டாக்டர் ஜே பி. வி பிலிப் கெரிவித்தார்

இவ்வருடத்துக்கான நேர்முகப்பரீட்சை இம்மாதம் 27-ம், 28-ம், 29-ம் திகதிகளில், யாழ் நகரிலுள்ள வட மாகாண மருத்துவக் கல்லூரியின் தலைமைக் காரியாலயத்தில் நடைபெறவுள்ளது [வி-இ]

இன்றுமுதல் புதிய ஒழுங்கில் மினிபஸ் சேவை

யாழ்ப்பாணம் வெள்ளி யாழ் நகரில் இன்றுமுதல் மினிபஸ்சேவைகள் புதிய ஒழுங்குகளின் பிரகாரம் நடைபெறும்.

குடாநாட்டின் ஒவ்வோரிடத்திற்கும் செல்லும் மினிபஸ்கள் இரண்டு மாதகிரமே உரிய தரிப்பிடத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருக்கும்.

மேலதிகமினிபஸ்கள் யாவும் விக்டோரியா வீதியிலும் யாழ். இலங்கைவங்கி வீதிப்பகுதியிலும் நிறுத்திவைக்கப்படும். [ச-எ]

இடமாற்றம்

பருத்தித்துறை வியாழன் யாழ். அபிவிருத்திச்சபை பூலோலி உபஅலுவலக தொழில்நுட்ப உத்தியோகத்தர் திரு எம் எக்ஸ் சர்வானந்தன் இன்று 15ம் திகதிதொடக்கம் யாழ். அபிவிருத்திச்சபை மானிப்பாய் (கிராம) உபஅலுவலகத்திற்குஇடமாற்றம்செய்யப்பட்டுள்ளார். (இ)

கலந்துரையாடல்

யாழ்ப்பாணம் வெள்ளி 'நமது எதிர்காலம்' என்ற தலைப்பில் கலந்துரையாடல் நிகழ்ச்சியொன்று 16ந் திகதி சனிக்கிழமை பிற்பகல் புங்குடுதீவு அந்தோனியார் ஆலயத்திற்கண்மையில் உள்ள தெய்வக்குழந்தைகள் இல்லத்தில் நடைபெயவுள்ளது. (இ)

தையல் பயிற்சி நிலையம்

சாவகச்சேரி, வெள்ளி சரசாலை தெற்கு சனசமூக நிலையத்தினர் அப்பகுதியில் இருக்கும் படித்தபெண்களுக்கு மிக விரைவி தையல் பயிற்சி நிலையம் ஒன்றினை ஆரம்பித்து நடத்த ஏற்பாடுகள் செய்து வருகின்றனர். (க)

வாரிவளவு நல்லியக்கசபை போட்டிகள்

யாழ்ப்பாணம், வெள்ளி காரைநகர்வாரிவளவு நல்லியக்க சபை-வியாவில் பாலர் பாடசாலை இணைந்து நடாத்தும் பாலர்பாடசாலைப் போட்டிகள் நாளை சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் வாரிவளவு நல்லியக்க சபை திறந்த வெளியரங்கில் நடைபெறும்.

சனிக்கிழமை பிற்பகல் விளையாட்டுப் போட்டிகளும், ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும் இவ்விழாவிற்கான சகல ஒழுங்குகளையும் வாரிவளவு நல்லியக்கசபை செயலாளர் திரு எஸ் பத்மநாதன் மேற்கொண்டுள்ளார். [சி]

கண் சிகிச்சைப் பிரிவு தற்காலிக நிறுத்தத்தால் நோயாளர் சிரமம்

சுன்னாகம், வியாழன் யாழ். மாவட்டத்திற்கான கண் சிகிச்சைப் பிரிவு யாழ். பெரியாஸ்பத்திரியில் மட்டுமே தற்போது நடைபெறுகின்றது. இப்பிரிவில் இரண்டு கண் வைத்திய நிபுணர்கள் தினமும் பெருமளவு கண் நோயாளர்களுக்கு சிகிச்சை யளித்துவருகின்றனர்.

மந்திகை, கெல்விப்பழை ஆஸ்பத்திரிகளில் மாதந் தோறும் குறிம்பிட்ட இரு தினங்கள் வீதம் நடைபெற்று வந்த கண் சிகிச்சைப்பிரிவு தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது இதனால் வடமராட்சி வலிகாமம் பச்சிலைப்பள்ளி பன்னர் தீவுப்பகுதியேன்ற தூரப்பகுதிகளிலிருந்து நூற்றுக்கணக்கான நோயாளர்கள் பலத்த சிரமங்களின் மத்தியிலும் போக்குவரத்துக் கஷ்டங்கள் மத்தியிலும் யாழ். பெரியாஸ்பத்திரிக்கு வந்து குவிகின்றனர்.

அதிகாலை நான்கு மணிக்கு பெரியாஸ்பத்திரி கண்சிகிச்சைப் பிரிவுக்கு வந்து ஐம்பது வரையிலான நம்பர் பெற்றவர்களே சிகிச்சை பெற முடிகின்றது தூர இடங்களில் இருந்து வருவோர் சிகிச்சை பெற முடியாத இக்கட்டான நிலைக்கு உள்ளாகின்றனர்.

மூலவள நிலையத்தின் 'மாதிரி பாலர் பாடசாலைக்கு புதிய கட்டிடம் அமையும்''

யாழ்ப்பாணம், வியாழன் 'கோப்பாய்வட்டாரக்கல்வி மூலவள நிலையம் ஒரு மாதிரி பாலர்பாடசாலை நடாத்துவதற்கு கூடியவிரைவில் புதிய கட்டிடம் அமைத்துக் கொடுக்க ஆவன செய்வேன் இந்நிலையம் பாலர்பாடசாலை ஆசியப்பயிற்சி நெறியை ஓராண்டுக் காலத்திற்கு நடத்த முன்வந்தது எமது கல்வித் திணைக்களத்திறகே பெருமை தேடித்தருகின்றது'' என்று யாழ் மாவட்டக் கல்விப்பணிப்பாளர் திரு. ஆர் சுந்தரலிங்கம், புத்தூர் ஸ்ரீ கோமஸ் கந்தக கல்லூரியில் இயங்கும் கோப்பாய் கல்வி மூலவளநிலைய டண்டபத்தில், பாலர் பாடசாலை ஆசிரியப் பயிற்சியை தொடக்கிவைத்துப் பேசும் போது கூறினர்.

கோப்பாய் கல்வி அகாரிதி திரு. ஆ. வ. தங்கராசா தலைமையில், நூற்றுக்குமேற்பட்ட பயிற்சியாளர்கள் மத்தியில் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்ட திரு சுந்தரலிங்கம் மேலும் பேசுகையில், 'பாலர்களுக்கு கல்விபுகட்டுவது இலேசான காரியமல்ல பாலர்பாடசாலைகளில் மிகுந்த கவனத்துடன் குழந்தைகளின் மனதைப் புண்படுத்தாமல், பக்குவமாக கல்வி போதிக்கப்பட வேண்டும். இப்பயிற்சிநெறி உங்களை அந்தப்பக்குவ நிலைக்கு கொண்டுவரும் என்பது எனது நம்பிக்கை' என்றார்.

கோப்பாய் வட்டாரக் கல்வி மூலவள நிலையப் பொறுப்பதிகாரி திரு எஸ். சி எஸ் சிதம்பரநாதனின் வரவேற்புரையோடு ஆரம்பமாகிய இவ் அங்குரார்ப்பண வைபவத்திற்கு தலைமைதாங்கிய கல்வி அதிகாரி திரு ஆ. வ. தங்கராசா பேசுகையில், 'எமது மண்ணின் எதிர்காலப் பிரசைகளை நல்லவர்களாக,வல்லவர்களாக வளர்த்தெடுக்கும் பொறுப்பு உங்களுடையது. பாலர் பாடசாலை ஆசிரியப் பயிற்சி மூலம் நீங்கள் கற்பித்தலில் பூரணத்துவத்தை நிச்சயம் அடைவீர்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு' என்றார்.

இவ்விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு யாழ் பல்கலைக்கழக கல்விப் பகுதி சிரேஷ்ட விரிவுரையாளர் திரு கே. சின்னத்தம்பி பண்டிதர் எஸ். சுப்பிரமணியம் ஆகியோரும் உரையற்றினர்கள். பயிற்சியாளரின் நன்றியுரையோடு வைபவம் முடிவடைய, பயிற்சிநெறி ஆரம்பமாகியது. இப்பயிற்சிநெறி சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரை நடைபெறும் என்பது குறிப்பிடத்தக்கது. [எ]

கிளிநொச்சி நிலைமைபற்றி ஆலோசனை

கிளிநொச்சி வியாழன் கிளிநொச்சியின் தற்போதைய நிலை, அகதிகள் புனர்வாழ்வு இடைநிறுத்தப்பட்ட கிளிநொச்சி கிராம சேவையாளர் நிலை முதலான விடயங்கள் தொடர்பாக கிளிநொச்சி பிரசைகள் குழு நேற்றுமுன்தினம் கூடி ஆலோசனைகளை மேற்கொண்டது

இக்கூட்டத்திற்கு பிரசைகள் குழுத்தலைவரும் நீர்ப்பாசனப் பொறியிலாளருமான சி.சுப்பிரமணியம் தலைமை வகித்தார். பல்வேறு பொதுஸ்தாபனப் பிரதிநிதிகளும் இக்கூட்டத்தில் பலந்துகொண்டு ஆலோசனைகள் வழங்கினர் [இ]

'பூஸா'வுக்கு அனுப்பப்பட்டனர்

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கைதுசெய்யப்பட்டு கல்லடி முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்கள், நேற்று இரு பஸ்களில் பூஸா முகாமுக்கு அனுப்பிவைக்கப் பட்டுள்ளனர். (மா)

'தியாகச் சுடர்கள்

யாழ்ப்பாணம், வெள்ளி ''தமிழீழ விடுதலைக்காக 25 - 7 - 86 வரை தம்மை அர்ப்பணித்துக் கொண்ட எம் இயக்க தியாகச் சுடர்கள் 27'' இவ்வாசகங்களைக் கொண்ட பாரிய சுவரொட்டிகள் நேற்று யாழ், குடாநாடெங்கும் காணப்பட்டன.

இச் சுவரொட்டிகள் தமிழீழ விடுதலைப் புலிகளால் வெளியிடப்பட்டுள்ளன.

'இது அழுவதற்காக அமைக்கப்பட்ட சமாதியல்ல; உறுதியின் உறைவிடம் இது'' என்றும் அச் சுவரொட்டிகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

களத்தில் பலியான ஒரு போராளியின் சமாதியின் மேல் நவீன ரக துப்பாக்கியும் இரும்புத் தொப்பியும் இருக்கக் கூடியதாகவும், அச்சமாதிக்குப் பக்கத்தில் துப்பாக்கி ஏந்திய ஒரு போராளி ஒரு சிறுமியையும் ஒரு சிறுவனையும் அணைத்துக்கொண்டு செல்வதையும் அச்சுவரொட்டியில் காணப்படுகிறது. [மா]

'பவுஸர்' கடத்தப்பட்டது

[மட்டக்களப்பு நிருபர்]

ஆயுதப்படையினரின் தேவைக்கென கொண்டு சென்ற 'டீசல்' இனந்தெரியாத 3 நபர்களால் கடத்தப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு புனகையிரத நிலையத்துகு அண்மையில் உள்ள எரிபொருள் கூட்டுத்தாபனத்திலிருந்து புறப்பட்ட பவுஸர், கூட்டுத்தபன வாசலில் வைத்துக் கடத்திச் செல்லப்பட்டுள்ளது. (மா)

ஆண்டு விழா

நெல்லியடி, வியா. கரவெட்டி கிழக்கு ''வளர்மதி'' சுகாதார நிலையத்தின் முதலாவது ஆண்டு நிறைவைக் குறிக்குமுகமாக இன்று 15-ம் திகதியன்று நிலையத்தினால் சிறப்பு மலர் ஒன்று வெளியிடப்பட வுள்ளது

தலைவர் மு தங்கராசா தலைமையில் நடக்கவுள்ள இவ் வைபவத்தில் ஆசிரியர் திரு. மு செல்லத்துரை மலரை வெளியிட்டுச் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார். [இ]

சுவரொட்டி ஒட்டுவோர் கைது

கொழும்பு வியாழன் சமாதானத்திற்கு எதிராகவும், இலங்கை அரசுக்கு எதிராகவும சுவரொட்டிகளை ஒட்டியதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர் மூவரை கொழும்பு கொக்வெல பொலிசார் நேற்று முன்தினம் கைது செய்தனர்.

ஆயுதங்களுடன் சுவரொட்டிகளை ஒட்டிக்கொண்டிருந்தவேளை ரோந்து சென்ற பொலிசார் இவர்களை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவர்களில் கொழும்பு மாநகரசபை உறுப்பினர் ஒருவரும் சுதந்திரக்கட்சி இளைஞர்சங்க தலைவரும் ஒருவருமடங்குவர். சி. எ)

SATURDAY NIGHT SPECIAL

STRING HOPPER BURIYANI with VENISON or WILD BOAR Curry for Rs. 35/- Only

BEER - Rs. 32/-

Daily Lunch P ckets at Competitive Rates

OLD PARK CHINESE RESTAURANT, Old Park Rd, Jaffna

(A 1140)

ராஜீவின் விமானக் கோளாறு——

ஏயர் இந்தியா அதிகாரியை லீவில் செல்லப் பணிப்பு!

புதுடில்லி, ஆக. 14

கடந்த வாரம் இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி வெளிநாட்டுப் பயணம் மேற்கொண்ட விசேட 'ஏயர் இந்தியா' விமானம் இயந்திரக் கோளாறுக்குள்ளானது தொடர்பாக 'ஏயர் இந்தியா' விமானச் சேவையின் உதவி முகாமையாளர் கட்டாய லீவில் செல்லும்படி பணிக்கப்பட்டுள்ளார்.

திரு. ராஜீவ்காந்தி பிரிட்டன், மெக்ஸிக்கோ ஆகிய நாடுகளுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்ட பின்னர் தாயகம் திரும்பும்போது அவரது விசேட விமானம் இயந்திரக் கோளாறுக்குள்ளானது.

இதனையடுத்து இந்த விமானம் மாஸ்கோவில் தரைஇறக்கப்பட்டு பழுதுபார்க்கப்பட்டது.

இவ்விமானப் பிசகு, திரு. ராஜீவ்காந்தியின் பாதுகாப்புக் குறித்து பல சந்தேகங்களைக் கிளப்பிவிட்டுள்ளது.

இதனையடுத்து இவ்விமானக் கோளாறு குறித்து ஆராயவென ஒரு விசேட ஆணைகுழுவும் அமைக்கப்பட்டுள்ளது.

உலகச் செய்திகள்

மத்திய தகவல் அமைச்சர் திருமதி மொஷினாகிட்வையின் பணிப்பின்பேரில் இந்த ஆணைக் குழு அமைக்கப்பட்டது.

இதேவேளை இவ்விமான விவகாரம் தொடர்பாக இந்திய தேசிய விமான சேவையான 'ஏயர் இந்தியா' வின் உதவி முகாமையாளர் கட்டாயலீவில் செல்லும்படி கேட்கப்பட்டுள்ளார்.

ஆயுதக்கடத்தலில் றீகன் மனைவியின் பணிப்பெண்

வாஷிங்டன், ஆக 14

ஆயுதக்கடத்தல் தொடர்பாக அமெரிக்க அதிபரின் மனைவியின் பணிப்பெண் ஒருவர் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார்.

காஸ்ரெலோ என்ற இப்பெண் இருபரகுவே நாட்டுக் காரருடன் அந்நாட்டுக்கு ஆயுதக்கடத்தலில் ஈடுபட்டிருந்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்டது. இப் பெண்ணும் அமெரிக்காவில் குடியேறிய பரகுவே நாட்டவர் என்று கூறப்பட்டது

திருமதி நான்ஸி றீகனின் பணிப்பெண்ணை இவர் திருமதி றீகனின் ஆடைகளுக்குப் பொறுப்பாக இருந்தவர் என்றும் அவருடன் பல வெளிநாட்டுச் சுற்றுப் பயணங்களை மேற்கொண்டவர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

பரகுவேக்கு சட்டவிரோதமாகச் சென்றகப்பல் ஒன்று கைப்பற்றப்பட்டதையடுத்தே இந்த ஆயுதக்கடத்தல் அம்பலமானது.

கடந்த 5 வருடகாலமாக காஸ்ரெலோ என்ற அப்பெண் திருமதி றீகனின் பணியாளராக இருந்துவருகின்றார்.

இவரது ஆயுதக்கடத்தல் நடவடிக்கையினால் வெள்ளை மாளிகைப் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதா என்று ஆராயப்படுகின்றது.

அரச அதிபருடன் பேச்சு

வல்வெட்டித்துறை, வியா.

பருத்தித்துறை அரசாங்க ஆதார வைத்தியசாலையில் பார்வையாளர் தங்குவதற்கான மண்டபமும், ஆஸ்பத்திரிக்கான சுற்று மதிலையும் அமைப்பதற்கான நடவடிக்கைகள் தொடர்பாக பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் கேலலித் குமார் யாழ் அரச அதிபரைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார். [ஏ]

விசாரணையின்பின் விடுதலை

பண்டத்தரிப்பு, வியா.

சேந்தாங்குளம் கடல் பகுதியில் அதிகாலை நேரத்தில் கட்டுமரமொன்றில் மீன் பிடித்துக் கொண்டிருக்கையில் கடற்படையினரால் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டு மடக்கிப்பிடிக்கப்பட்ட இரு மீனவர்களும் விசாரணையின் பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

கடலில் சோந்து சுற்றிய பிரங்கிப் படகிலிருந்த கடற்படையினர் பிரஸ்தாப மீன் பிடிப்படகைக்கண்டு துப்பாக்கிப் பிரயோகம் செய்தபோது அப்படகிலிருந்த மீனவர்கள் இருவரும் அச்சமடைந்து கடலில் குதித்து நீந்திச் சென்றதாகவும் கடற்படையினர் அவர்கள் இருவரையும் கலைத்துச் சென்று பிடித்து கைது செய்து கொண்டு காங்கேசன்துறை ஹாபர் வீயூ ஹோட்டலிலுள்ள இராணுவ முகாமில் ஒப்படைத்ததாகவும் அங்கு நடைபெற்ற விசாரணையின் பின்பு இருவரும் விடுதலை செய்யப்பட்டதாகவும் இது பற்றி தெரிவிக்கப்படுகின்றது கடந்த சனிக்கிழமை என்று இச்சம்பவம் நடைபெற்றது. [எ]

'பனைவளம்பற்றி' மேற்கு ஜேர்மனில் ஆராய்ச்சி

சாவகச்சேரி, வியா.

மேற்குஜேர்மனி இளம்பட்டதாரி ஒருவாவடபகுதியின்பனை வளம். பனம்சீனி உற்பத்தி சம்பந்தமான ஆராய்ச்சி ஒன்றினை அங்கு தற்போது மேற்கொண்டுவருகிறார்.

அத்துடன் வடபகுதியின் சமூகக்குறைபாடுகள் பிரச்சினை சம்பந்தமாகவும் இவர் ஆய்வுகள் மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளார் எனவும் தெரியவருகிறது. [சி]

பெர்லின்சுவர் 25வது ஆண்டு:

மே. பெர்லின் வாசிகள் ஆர்ப்பாட்டம்

பெர்லின், ஆக 14

பெர்லின் சுவரின் 25வது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு மே. பெர்லின் வாசிகள் பெரும் ஆர்ப்பாட்டப் ஒன்றை நேற்றுநடத்தினர்.

இந்த ஆர்ப்பாட்டத்தின்போது இந்த சுவர் அகற்றப்பட்டு கிழக்கு—மேற்கு பெர்லின் மக்கள் ஒன்றுபட அனுமதிக்க வேண்டுமென அவர்கள் கோஷமிட்டனர்.

கூடவே கம்யூனிஸ எதிர்ப்புக் கோஷங்களையும் அவர்கள் எழுப்பினர். அத்துடன் பெர்லின் சுவர் அருகேநின்ற கிழக்கு பெர்லின் காவற்காரர்கள் மீதும் அவர்கள் கற்களை வீசினர். இந்த ஆர்பாட்டத்தில் சுமார் ஆயிரம் மேபெர்லின் வாசிகள் கலந்துகொண்டனர்.

பிரயாண ஒழுங்குகள்

★ டென்மார்க் ★ கனடா

நேரடிப் பிரயாணம் உடனுக்குடன் ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்.

★ சவூதி ★ குவைற்
★ அபுதாபி

ஆகிய இடங்களில் வருமான வாய்ப்புகளுக்கான ஒழுங்குகள் உடன் செய்து கொடுக்கப்படும்.

Passport, Bond

முதலியனவும் செய்துகொடுக்கப்படும்.

GROUP ATLANTIC

163, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

[அடைக்கலமாதா கோவிலுக்கு முன்பாக]

A 1035

இலங்கைத் தமிழ் அகதிகள்

நியூபவுண்லாந்து வந்தது பற்றி முரண்பட்ட தகவல்கள்

சென்ஜோன்ஸ், ஆக. 14

கடந்த சில தினங்களுக்கு முன்னர் இலங்கைத்தமிழ் அகதிகள் 152 பேர் கனடாவின் நியூபவுண்லாந்துதீவை அடைந்தது தொடர்பாக பல முரண்பட்ட தகவல்கள் வெளிப்பட ஆரம்பித்துள்ளன.

இந்த அகதிகள் நேற்று நியூபவுண்லாந்தின் தலைநகரான சென் ஜோன்ஸில் பத்திரிகையாளர் மகாநாடு ஒன்றில் கலந்து கொண்டனர். இம்மகாநாட்டிலேயே இவர்களது பயணம் குறித்து பல முரண்பட்ட தகவல்கள் வெளியாகின.

இந்தியாவிலிருந்தே கப்பல் ஒன்றில் கனடா கொண்டுவரப்பட்டு இடைநடுவில் உயிர்காப்புப்படகுகளில் தாம் இறக்கிவிடப்பட்டதாக இவர்கள் தெரிவித்தனர்.

மேற்கு ஜேர்மனியின் ஹம்பேர்க் நகரிலுள்ள அகதி முகாமொன்றிலிருந்து அண்மையில் காணாமல் போனதாக அறிவிக்கப்பட்ட இலங்கைத் தமிழ்அகதிகளே இவர்கள் என அப் பத்திரிகையாளர் மகாநாட்டில் கருத்து வெளியிடப்பட்டது.

ஆயினும் இத்தமிழ் அகதிகள் இதனை மறுத்தனர். தாம் இந்தியாவிலிருந்தே கொண்டு வரப்பட்டதாக அவர்கள் உறுதிபடக்கூறினர்.

இவர்கள் இவ்வாறு கூறியபோதிலும் இவர்களிடம் பல ஜேர்மன் உடைகளும், பொருள்களும். ஜேர்மன் பத்திரிகைகளும் காணப்பட்டன. இது குறித்துக் கேட்கப்பட்டபோது ஜேர்மனியிலுள்ள தமது உறவினர்கள் மூலமாக இலங்கையில் இவற்றைத் தாம் பெற்றதாக அவர்கள் கூறினர்.

தாம் பயணஞ்செய்த கப்பலின் பெயரை இருள் காரணமாகவும், அக்கப்பலின் சிப்பந்திகள் மீதிருந்த பயம் காரணமாகவும் அறிந்து கொள்ள முடியவில்லை எனவும் இவர்கள் கூறினர்.

இந்த அகதிகள் மீதான குடிவரவு-குடியகல்வு வேலைகள் முடிவுற்றதையடுத்து ஒரு வருடகாலம் தற்காலிகமாக கனடாவில் தங்குவதற்கு கனேடிய அரசு இவர்களுக்கு அனுமதியளித்தது. இதனையடுத்து நியூபவுண்லாந்திலிருந்து 24 மணிநேரத்தில் கனடாவின் மொன்ட்றியேல் நகர் செல்லும்படி இவர்கள் பணிக்கப்பட்டனர்.

தீவுப்பகுதியில் இரண்டுமாத உணவு வகைகள் சேமித்து வைக்கக் கடனுதவி

யாழ்ப்பாணம், வெள்ளி.

தீவுப்பகுதிகளில் இரண்டு மாதங்களுக்குரிய அரிசி மற்றும் உணவுப் பொருட்களை வாங்கிச் சேமித்து வைப்பதற்கு கடன் வசதி வழங்கப்படும்.

தீவுப்பகுதிகளில் உள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கே இக்கடன் வசதி செய்யப்படும்எனத் தெரிவிக்கப்படுகிறது.

தீவுப்பகுதிகளில் தற்சமயம் ஏற்பட்டுள்ள உணவு, போக்குவரத்து, குடிநீர் பிரச்சினைகளையிட்டு தீவுப்பகுதி குழுவினர் நேற்று யாழ் அரசாங்க அதிபரை சந்தித்து ஆலோசனை நடாத்தினர்கள்-

இந்த ஆலோசனையின் போதே தீவுப்புகுதிமக்களின் உணவுப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படாதிருக்கும் வகையில் இரண்டு மாதத்துக்குரிய உணவுச்

(7-ம் பக்கம் பார்க்க)

பிரயாண ஒழுங்குகள்

சவூதி - கிளீனேர்ஸ்

குவைத்- கிளீனேர்ஸ்

ஈராக்-ஆஸ்பத்திரி கிளீனேர்ஸ்

ஆகிய நாடுகளுக்கு வருமான ஒழுங்குகள் அத்துடன்

பாஸ்போட், பொன்ட், ரிக்கற்றிங் ஆகியனவும் செய்து கொடுக்கப்படும்.

யூனிவேர்சல் ஏஜென்சி

125 (455), ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

[ஆயுர்வேதக்கல்லூரிக்கு அருகாமையில் பெற்றேலியம் கூட்டுத்தாபனத்திற்கு முன்பாக]

(A 1044)

மண்ணகத்தின் மாகவியாம் மன்

வெண்பாவை நோக்கி வேண்டும் கவிதையென்றுள்
ஒண்பாவை நோக்கை உளம்கொண்டேன் - கண்பாவை
ஆடி அசையாமல் அன்பாய்த் தியானித்தே
கூடிக் கொடுத்தேன் குணபா

குணப்பாவால் என்னைக் குறிப்பாகப் பார்த்தே
மணப்பாவை போலும் மருவி - அணிப்பாவை
கம்பனைப்போல் நீயும் கவிபாடவேண்டுமெனில்
தெம்புனக்குத் தாறனென்றுள் சேர்ந்து

சேர்ந்து கவிபாடித் தேனூர் தமிழோடு
கூர்ந்த அறிவைக் கொடுத்துவந்த - தேர்ந்த
மதுரகவி நாகராஜன் மன்னுகவி மாட்சி
இதமிருந்தால் போதுமென்றேன் யான்

என்றும் மதுரகவி என்னுமுயர் நாகராஜன்
சென்றே கவிபாடும் சீரரங்கில் - நின்றே
கவிபாட வைத்த கலைமகளே ஞான்றும்
சுவையோடு பாடவருள் சொட்டு

அருள்சொட்டு மண்ணல் அன்பினுக்கோர் ஆசான்
தெருள்சொட்டும் பண்பின் சிகரம் - இருளற்ற
விண்ணகத்தைக் கூடி விமலனடி சார்ந்தாலும்
மண்ணகத்தின் மாகவியாம் மன்.

— கவிஞர் அரியாலையூர் வே. ஐயாத்துரை.

★ 15 8-86 கவிஞர் நினைவுதினம்.

இன்றைய பலன்

மாதம்: ஆடி
திகதி: 30 (1986-8-15)
கிழமை: வெள்ளி
திதி: தசமி மு.ப.வரை
நட்சத்திரம்: கேட்டை பி.ப.வரை

மேடம்: செய் தொழிலால் சிறப்புண்டு. மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். பொருள் துறையில் திருப்திகரமான நிலை காணப்படும்.

இடபம்: ஆயுதங்களுடன் பழகுபவர்கள் அவதானம் வேண்டும். எதிர்பாராத விபத்துக்கும் இடம் ஏற்படலாம். விழிப்புடன் நடந்து கொள்ளவும்.

மிதுனம்: தாம்பத்திய வாழ்வில் தனிச் சிறப்பும் காணப்படும். புதுமையான எண்ணங்களால் உந்தப்படுவீர்கள். தொழில் துறையும் சிறப்புப் பெறும்.

கடகம்: ஏக்கத்தின் சாயல் தாக்கும். எதிர்பாராத வகையில் சிக்கலில் மாட்டிக் கொள்ள நேரிடும். அவதானம் வேண்டும்.

சிங்கம்: வாகன சுகமுண்டு. சொகுசான வாழ்க்கையையே விரும்புவீர்கள். பிதா வழிச் சுகத்துடன் குருவின் ஆசியு முண்டு.

கன்னி: கடமையில் உற்சாகமுண்டு. குடும்ப மகிழ்ச்சியுடன் வாகன நலனும் உண்டு. பெரியோர் உதவியும் உண்டு.

துலாம்: பணம் தேடும் படலத்தில் வெற்றிக்கு இடமுண்டு. பாவையர்களின் சிநேகிதமும் கிடைக்கலாம்.

விருச்சிகம்: வாழ்க்கையே ஒரு புதிராகத் தோன்றும். செலவினங்கள் உச்சக் கட்டத்தை அடையும். குடும்பத்திலும் கவலைக்கிடமுண்டு.

தனுசு: அவசரப் புத்தியினால் விபரீதங்கள் விளையலாம். கோபத்தையடக்கின் நிலைமை சீரடையும்.

மகரம்: பெரிய இடத்துச் சிநேகம் இன்று ஏற்படலாம். புது வழிகளின் மூலம் பணம் கிடைக்கும். பொன்னை தினம்.

கும்பம்: பேராசையின் மூலம் குறுக்கு வழியை நாடுவீர்கள். மறைமுக எதிர்ப்புகளைச் சமாளிக்க வேண்டியநிலை ஏற்படும். முன்னைச் சரிக்கை நன்று

மீனம்: வாகனச் சொந்தக்காரர்களுக்குச் சிறப்பான தினம். அபாயத் துறையில் ஈடுபாடு ஏற்படும். தாய் வழிச் சுகமும் உண்டு.

திருமலை
வே. ரவீந்திரன்

தீவுப்பகுதியில்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

சேமிப்புக்கான கடன் உதவியைச் செய்ய விருப்பம் தெரிவிக்கப்பட்டது.

குடிநீர்ப்பிரச்னையும் சமூக சேவைகள் மூலம் தீர்த்து வைப்பதெனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

(ச-இ)

அகதிகளுக்கு கிணறுகள்

சாவகச்சேரி, வியா.

கெற்பேலியில் குடியமர்த்தப்பட்டிருக்கும் 83ம் ஆண்டுநடை பெற்ற கலவரங்களில் பாதிக்கப்பட்ட அகதிகளுக்கு அவர்களின் வீட்டு, விவசாயத் தேவைகளுக்கு உதவும்பொருட்டு 'நோருட்'ஸ்காபனத்தின் சார்பாக ஒவ்வொரு கிணறுகள் கட்டிக்கொடுப்பதற்கான ஏற்பாடு உதவிகள்கிடைத்துள்ளன.

அங்கு சுமார் 60 குடும்பங்கள் தென்மராட்சி அகதிகள் புனர்வாழ்வுத் திட்டத்திலுல் குடியேற்றப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சியில் திருட்டு அதிகரிப்பு

கிளிநொச்சி, வியா.

கிளிநொச்சியில் தற்போது பாடசாலைகள், ஆஸ்பத்திரிகள், தனியார் தொழிற்சாலை கடைகளில் திருட்டுச் சம்பவங்கள் பல இடம்பெற்று வருகின்றன.

பொதுமக்கள் வெளியேறியுள்ள பகுதிகளில் உள்ளஇந்த இடங்களிலும் பலவீடுகளிலும் திருடர்கள் தொல்லை தினமும் அதிகரித்துவருகிறது. [சி]

விண்ணக வாழ்வின் 31—ம் நாள் நினைவஞ்சலி



அமரர் இராசநாயகம் இரட்ணராஜா

மலர்வு: 18-02-1948
உதிர்வு: 16-07-1986

அன்பு மகனே! தலைவ! தந்தாய்! அண்ணு! உற்றவர் வழியினுப்ப பெற்றவர் தூணையுடனே நற்சுகம் காணவண்டி நடினுய் வேலூருக்கு சுற்றமெலாம் உதவுசுகத்திற்காய் வேண்டிநிற்க நற்செய்திவந்தத்த நலச சுகம் பெற்றூரென மகிழ்ந்து நாம் இருக்கையிலே மண்ணுலக வழ்வு நீத்து ஏகினுய் இறைவனுடன் விண்ணுலகில் சங்கமிக்க அமலனின் நிழலே நீ அடைந்தின்று மாதமொன்று கலங்கி நாம் தவிக்கின்றேரும், கண்ணீரில் மிதக்கிறேரும் நித்திய இன்பம் பெற நிமலனிடம் சரண் டைந்தீர். நித்தியமாய் உம் அன்பும் நிலைத்திருக்கும் எம் நெஞ்சில். இவரின் ஆன்மா இறைவனில் இளைப்பாற 16 08-86 சனிக்கிழமை மலை 4-30 மணிக்கு புனித பிலிப்பு நேரியார் ஆலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும் "சீவியத்தில் நேசித்தோம். மரணத்திலும் மறவோம்".

அன்புடன் நினைவுகூரும்:
பெற்றோர், மனைவி, பிள்ளைகள், சகோதரர், ராணி இல்லம், பத்தாவத்தை, இளவாலை. (C 4071)

வவனியா ஆஸ்பத்திரியில் சம்பவம்

வவனியா, வியாழன்

வவனியா ஆஸ்பத்திரிக்கு வந்த தமிழ் பெண் மானபங்கப் படுத்தப்பட்டுள்ளார். சந்தேகநபர்களை பொலிசார் தேடிவருகிறார்கள்.

சுகவீனமுற்று ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவரும் தமது கணவரைப் பார்ப்பதற்கு இப்பெண் சென்றிருந்த போது ஆஸ்பத்திரியில் கடமையாற்றும் பெரும்பான்மை சமூகத்தைச் சேர்ந்த சிற்றூழியர் ஒருவரினுல் மானபங்கப்படுத்தப் பட்டுள்ளார் இச்சம்பவம் பற்றி மேலிடத்திற்குப் புகார் செய்யப்பட்டுள்ளது

சம்பந்தப்பட்ட சிற்றூழியர் தற்போது தலைமறைவாகியுள்ளார் (ஏ)

திருமலையில் படையினர் ஒருவர் பலி மூவர் காயம்

கொழும்பு, வியா.

திருமலை கோணேஸ்வரர் ஆலயத்துக்கு அருகாமையில் நேற்று சென்ற இராணுவத்தினர் மீது போராளிகள் தாக்கியதில் ஒரு இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் மூன்று இராணுவத்தினர் படுகாயமடைந்ததாகவும் அரசாங்கம் அறிவித்துள்ளது. [மா]

கலைஞர்களுக்கு கௌரவம்

யாழ்ப்பாணம், வெள்ளி

நாதசுர இசைக்கலைஞர்கள் ப. நாகேந்திரன், கோ. பஞ்சமூர்த்தி ஆகியவர்களுக்கு ஆவரங்கால் சிவன் தேவஸ்தான மண்டபத்தில் அண்மையில் பட்டமளிப்பும் பாராட்டும் வழங்கப்பட்டது.

பண்டிதர் ச சுப்பிரமணியம் தலைமையில் இடம்பெற்ற இவ்வைபவத்தில் முத்தமிழ் வித்தகர் என். வீரமணி ஐயர் கலைஞர்களுக்குப்பட்டமளித்து கௌரவித்தார். பண்ணிசைப் புலவர் சங்கீதபூஷணம் வி. நவரத்தினம் வாழ்த்துப்பா இசைத்து வழங்கினர்.

தேவஸ்தான தர்மகர்த்தாக்களான திரு. க. சுப்பிரமணியம், திரு. ச. சோமசுந்தரம் ஆகியோர் பொன்னாடை போர்த்தினர்கள்.

இருவர் காயம்

வல்வெட்டித்துறை, வியா.

வீதியில் வெட்டப்பட்டிருந்த பள்ளத்தில் வான் விழுந்ததால் வானில்வந்த பிரயாணிகள் இருவர் காயமடைந்தனர்.

வல்வெட்டிக் குறையிலிருந்து பிரயாணிகளை ஏற்றி வந்தவான் புத்தூரில் குறுக்கே வெட்டப்பட்டிருந்த பள்ளத்தில் விழுந்ததால் பிரயாணஞ் செய்த வல்வெட்டி, உடுப்பிட்டியைச் சேர்ந்த இருவர் காயமடைந்தனர். [இ]

ஊழியர் நன்மைகருதி பஸ்சேவை

பருத்தித்துறை, வியா

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலைக்குச் செல்லும் ஊழியர்களின் நன்மை கருதி பருத்தித்துறை வடபிராந்திய போக்குவரத்து சபைச்சாலை பஸ் சேவை ஒன்றை ஆரம்பித்துள்ளது

பருத்தித்துறையில் இருந்து காலை ஆறேகால் மணிக்கு ஆரம்பிக்கப்படும் இந்த பஸ் சேவை நெல்லியடி, குஞ்சர்கடை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, அச்சுவேலி, சுன்னாகம் ஊடாக காங்கேசன்துறையைச் சென்றடையும்

பின்னர் எட்டரை மணிக்கு காங்கேசன்துறையிலிருந்து புறப்பட்டு பருத்தித்துறைக்கு வந்தடையும்

பின்னர் நண்பகல் பருத்தித்துறையிலிருந்து காங்கேசன்துறைக்குச் சென்று அங்கிருந்து நாலரை மணிக்குப் புறப்பட்டு பருத்தித்துறையை வந்தடையும்.

சலுகை கட்டணத்தில்
கம்ப்யூட்டர் கல்வி



Computer Programming
&
Data Processing Basic Language
வகுப்புக்கள் ஆரம்பம்: 23 8 86
மொத்த கட்டணம் 750/- மட்டும்
O/L படித்த இருபாலாரும் சேரலாம்
★ தமிழ் மொழி பெயர்ப்புகள் வழங்கப்படும்.
நேரில் வரவும்:
Unikco Computer Centre
சுதுமலை சந்தி,
மானிப்பாய்.
NOTE: பலரின் வேண்டுகோளுக்கு இணங்க— யாழ் நகரிலும் வகுப்புக்கள் நடைபெற உள்ளன.
விபரம்: நேரில். C 4075

உ
திருமண அழைப்பு
மணமக்கள்

திருநிறை செல்வன் இளங்கோ
திருநிறை செல்வி சாந்தினி

நிகழும் திருவள்ளுவராண்டு 2017, ஆவணித் திங்கள் 1ஆம் நாள் (17-8-86) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் மணி 4க்குமேல் 5க்குள் இலண்டன முருகன் கோவில், எண் 270A, ஆர்ச்வே ரோடு, உயர்குன்ற வாசல், இலண்டன் வடக்கு 6, 5BA நடைபெறும் திருமண விழாவிற்கும், விருந்தோம்பலுக்கும் தாங்கள் சுற்றமும் நட்பும் சூழ வருகைதந்து மணமக்களுக்கு நல்வாழ்த்துக்கூறி விழாவினைச் சிறப்பித்துத் தருமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

தங்கள் அன்புள்ள

மணமகன் பெற்றோர்:
சி இளையதம்பி
வழக்கறிஞர்,
அளவெட்டி,
யாழ்ப்பாணம்.

E SRINIVASAN
37-B Frith Road,
London E 11-4 Ex.
(Tel: 556-6655)

மணமகள் பெற்றோர்
த. சு. கனகசபை
கணக்காளர்,
நிதிஅமைச்சு, கடுனு,
நைஜீரியா.
10/1, அம்மன வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

T. S. KANAGASABAI
C/o 4. Leyburn Road
London N-18, 2BE
(Tel: 807-6995)

(A 1136)

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

வெள்ளிக்கிழமை 15-8-86

குட்டியானை

ஒட்டிசுட்டான், வியாழன்.

முத்தரசன் காலத்தில் வெட்டப்பட்ட பாழடைந்த கிணற்றுக்குள் தவறுதலாக விழுந்த யானைக்குட்டியை போராளிகள் குழுவொன்று மீட்டுள்ளது.

இச் சம்பவம் நேற்று முன்தினம் முத்துஐயன் கட்டு குளத்திற்கு அண்மையில் உள்ள யானை விழுந்தான் என்னும் இடத்தில்இடம்பெற்றது. மீட்கப்பட்ட யானைக் குட்டி 4அடி உயரமானது

இனப்பிரச்னை தீர்வு
"பேச்சுக்கள் நடத்தக்கூடிய சூழ்நிலை இப்போது இல்லை"

சென்னை, ஆகஸ்ட், 14

"இலங்கை இனப்பிரச்னையைத் தீர்ப்பதற்காக எத்தகைய தீர்வுகள் இப்போதுமுன்வைக்கப்பட்டாலும், பேச்சுக்கள் நடத்தப்படக்கூடிய சூழ்நிலை இப்போது காணப்படவில்லை" என்று ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் திரு. க. பத்மநாபா கூறியுள்ளார்.

'புரொன்ட்லைன்' சஞ்சிகைக்களித்த பேட்டியிலேயே இதனை அவர் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதத் தடைச் சட்டம், மனித உரிமைகள் சீரழிவு, வேலையில்லாப் பிரச்னை, வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு போன்ற காரணங்களினால் சிங்கள மக்களும் எண்ணற்ற பிரச்னைகளை இப்போது எதிர் நோக்குகிறார்களெனவும் அவர் தமது பேட்டியில் தெரிவித்துள்ளார்.

ஈரோஸ் பாலகுமார்

புதிய யோசனைகள் குறித்து திரு. பாலகுமார் தமது பேட்டியில். "இந்த யோசனைகளை நாம் இன்னமும் முழுமையாக ஆராயவில்லை ஆயினும் நம் முன்னணி முன்வைத்த நான்கு கோரிக்கைகளை இன்னமும்வலியுறுத்துவோம்" என்று கூறினார்.

புதியதொரு யுத்த நிறுத்தமொன்று செய்துகொள்ள உடன்படுவீர்களா எனக் கேட்கப்பட்ட கேள்விக்கு திரு.பாலகுமார் பதிலளிக்கையில், "இது விஷயத்தில் கசப்பான அனுபவமொன்றை முன்னர் நாம் கற்றோம். எனவே இது குறித்து மிகவும் அவதானமாக நாம் நடந்துகொள்வோம்" எனக் கூறினர்.

'புளொட்' உமாமகேஸ்வரன்

புதிய யோசனைகள் பற்றி திரு உமா மகேஸ்வரன் கருத்துத் தெரிவிக்கையில், தாங்கள் இந்த ஆலோசனைகளை இன்னமும்முழுமையாகஆராயவில்லையென்றும் ஆராய்ந்தவுடன், இந்திய அரசுடன் இது குறித்துஉறுதிப்படுத்திக்கொள்வார் என்றும் கூறியுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகள்

திரு. யோகி கருத்துத் தெரிவிக்கையில், இந்த யோசனைகளை நாங்கள் முழுமையாக ஆராய்ந்தவுடன் தமது கருத்துக்களை தமிழக முதலமைச்சரிடம் தெரிவிக்கப்படும் எனக் கூறினர். (இ)

கிராமோதய சபைத்தலைவர் கைது

திருகோணமலை வியாழன் மூதூர் கட்டைபறிச்சான் கிராமோதய சபைத் தலைவர் திரு. எஸ். உதயகுமார் திருகோணமலை கச்சேரிக்கு அரசாங்க அதிபரைச் சந்திக்கச் சென்றபோது பாதுகாப்புப் படையினரால் கைதுசெய்யப்பட்டார். (ஒள)

அரச அதிபர் குழுவினர்
திருத்தப்படும் வீதிகளை பார்வையிட்டனர்

யாழ்ப்பாணம், வெள்ளி

வட்டுக்கோட்டை, மாதகல் போன்ற பகுதிகளில் திருத்தஞ் செய்யப்பட்ட வீதிகளை யாழ் அரசாங்க அதிபர் தலைமையிலான அதிகாரிகள் குழு நேற்று சென்று பார்வைட்டது.

யாழ். அரசாங்க அதிபர் திரு. எம் பஞ்சலிங்கம் தலைமையிலான இக்குழுவில் மாகாண சிவில் பொறியியலாளர் திரு திசநாயகம், யாழ். மாவட்டப் பொறியியலாளர் திரு. பாலேந்திரா, மேலதிக திட்டமிடல் பிரதிப்பணிப்பாளர் திரு. சிவதாசன் ஆகியோர் அங்கம் வகித்தனர்.

வீதிகள் திருத்தஞ் செய்யப்பட்டமை திருப்தியாக இருப்பதாக குழுவினர் தெரிவித்தனர்

இத்தடன் அராலித்துறைக்கும் இக்குழுவினர் சென்று பார்வையிட்டனர்.

அராலிக்கடலில் 100 அடி நீளமான பாதை அமைத்துக் கொடுக்க இவர்கள் முடிவு செய்துள்ளனர். (ச-இ)

மத்திய கல்லூரி மாணவர் இம்சை

யாழ்ப்பாணம், வெள்ளி

'பாடசாலை மாணவர்களின் சுதந்திரத்தை பல்கலைக்கழக மாணவர்கள் பறிப்பதா' என்ற தலைப்பிட்ட அறிக்கை ஒன்றை யாழ். மத்திய கல்லூரி மாணவர்கள் நேற்று வெளியிட்டுள்ளனர்.

தமது கருத்தை வெளியிடும் வகையில் துண்டுப் பிரசுரம் விநியோகித்த யாழ் மத்திய கல்லூரி மாணவர்களில் சிலர் யாழ். பல்கலைக் கழகத்துக்குள் வைத்து இம்சைப்படுத்தப் பட்டது குறித்து அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நெல்லியடி பிரஜைகள் குழு

யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் பகிஷ்கரிப்பினைக் கண்டித்து நெல்லியடிப்பிரஜைகள் குழுவும் துண்டுப் பிரசுரம் ஒன்றை வெளியிட்டுள்ளது

"யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் பகிஷ்கரிப்புத் தொடர்பாகப் பல்கலைக்கழக மாணவர்கள் முன்வைத்திருக்கும் கோரிக்கைகள் நியாயமற்றவையாகும். இக்கோரிக்கைகள் அநீதியை ஆதரவளிப்பதாக அமைந்துள்ளதால் இதனை உடனடியாகக் கைவிடுமாறும் சம்பந்தப்பட்ட மாணவர்களைக் கோருவதாக அப்பிரசுரத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது. [மா]

பொருள்கள்...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

செந்தில்ராசா (வயது 20) ஆகிய மூவருமே கொலை செய்யப்பட்டு எரிக்கப்பட்டவர்களாவர்.

கொலை செய்யப்பட்டு எரிக்கப்பட்டவர்களின் சடலங்கள் உருக்குலைந்த நிலையில் காணப்பட்டன.

எரிக்கப்பட்ட லொறியின் பெறுமதி 4 லட்சம் ரூபா என்றும் கொள்ளையடிக்கப்பட்ட அரிசி, மிளகாய் ஆகியவற்றின் பெறுமதி 2 லட்சம் ரூபா என்றும் தெரிவிக்கப்பட்டது. (வா)

"பல்கலைக்கழகம் நோக்கி" பிரசுரங்கள் தரும் விளக்கம்

யாழ்ப்பாணம், வெள்ளி

"இராணுவ அச்சுறுத்தல்களிலிருந்து எமது கல்வி சீரழியாது எம்மைப் பாதுகாத்து வரும் விடுதலைப் போராளிகளின் தார்ப்பரியம் நாம் அனுபவத்தின் மூலம் அறிந்தது. அப்படிப்பட்டவர்களை வெளியேறும்படி பகிரங்கமாகக் கூறுவது போராளிகளின் போராட்டத்தை இழிவு படுத்துவதாகும்" என்று யாழ். மத்திய கல்லூரி மாணவர்களால் 'பல்கலைக்கழகம் நோக்கி" என்ற தலைப்பில் வெளியிடப்பட்ட பிரசுரமொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த பிரசுரத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

"சிறீலங்கா அரசின் மாணவர்கள் மீதான திட்டமிட்ட கல்வி அழிப்பு நடவடிக்கையாலும், ராணுவ அச்சுறுத்தல்களினாலும் மாணவரின் கல்வி பெருமளவு சீரழிக்கப்பட்டநிலையில் மாணவர்களை எதிர்காலம் நோக்கி வழி நடத்த வேண்டிய யாழ். பல்கலைக் கழகத்தில் 'ரூக்கிங்' என்பதன் நல்லெண்ணத்தன்மை முற்றாக நீங்கிய ஒரு வகை வதை என்ற நிலைக்கு மாறிவிட்ட 'ரூகிங்" கை விடப்பட வேண்டியதே.

"தாம் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேற்றப்படாதபட்சத்தில் தம்மை தென்னிலங்கை பல்கலைக்கழகங்களிற்கு மாற்றும்படி பல்கலைக்கழக மாணவர்கள் கோரிக்கை விட்டுள்ளமையும் பாதுகாப்புத்தருமாறு மாவட்ட இணைப்பதிகாரியிடம் கேட்க இருப்பதையும் எமது இரத்தந்தோய்ந்த போராட்டத்தை அந்நியர்களுக்குக் காட்டிக்கொடுக்கும் துரோகத்தனமாகும். இங்கு பாதுகாப்பில்லையென்று தென்னிலங்கை செல்லவிரும்புபவர்கள் ஒரு நாள்அங்கு பாதுகாப்பில்லை என்று இங்கு வருவார்கள்.

இதுசம்பந்தப்பட்ட பிரசுரங்களை யாழ். இந்துக்கல்லூரி கொக்குவில் இந்துக்கல்லூரி மாணவர்களும் வெளியிட்டுள்ளனர். 'போராட்ட சூழ்நிலையில் முக்கிய அவசியம்தானா?' 'பல்கலைக்கழக மாணவர்களுக்கு ஒருவேண்டுகோள்' என்ற தலைப்பிலான பிரசுரங்கள் நேற்றுவெளியிடப்பட்டுள்ளன. [மா]

7 போர்விடுதலை

வவனியா, வியாழன்

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு செல்லும் வழியில் வவனியா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட யாழ்ப்பாண இளைஞர்கள் இருவர் உட்பட ஏழுபேர் நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

விடுதலை செய்யப்பட்டோர் விபரம் வருமாறு: நாகமணி விசயரத்தினம் (24வயது) கட்டுவன், நவரத்தினம் சிறிதரன் (20வயது) ஏழாலை வடக்கு, ஆழ்வார் சின்னையா (68வயது) மாங்குளம், நடராசா சுதாகரன் 25 வயது) பண்டாரிக்குளம், சுப்பிரமணியம் செல்வராசா (29 வயது) இரணை இலுப்பைக் குளம், பொன்னையா பத்மநாதன் (25வயது) நெடுங்கேணி, தாமோதரம் பிள்ளை செல்வராசா (21 வயது) நெடுங்கேணி.

(வா-இ)

யாழ். பல்கலைக்கழக
வழமையான நிர்வாகத்துக்கு மாணவர்கள் உதவவேண்டும்
— பதில் துணைவேந்தர்

யாழ்ப்பாணம், வெள்ளி.

"பல்கலைக்கழக மாணவர் குழுவினரால் கையளிக்கப்படடுள்ள கோரிக்கைகளை ஆராய்ந்து தீர்வுகாண பல்கலைக்கழக நிர்வாகம் அக்கறை கொண்டுள்ளது. எனவே மாணவர்கள் சகல வகைகளிலும் பூரண ஒத்துழைப்பு வழங்கி வழமையான நிர்வாகத்தை செயற்படுத்த வழி செய்யவேண்டும்" என்று பதில்துணைவேந்தர் திரு. நா. பாலகிருஷ்ணன் யாழ் பல்கலைக்கழக மாணவர்களுக்கு விடுத்துள்ள அறிக்கையொன்றில் கோரிக்கை விடுத்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் "பல்கலைக்கழகத்தில் இன்றைய நிலைமை தொடர்பாக ஏற்பட்டுள்ள பிரச்னைகளைப் பல்கலைக்கழக நிர்வாகம் நன்கு உணர்ந்துள்ளது. பல்கலைக்கழக மாணவர் குழுவினர் கடந்த 12ம் திகதி எம்மிடம் கையளித்த கோரிக்கைகளை ஆராய்ந்து தீர்வு காண்பதற்கு பல்கலைக்கழக நிர்வாகம் மிக அக்கறை கொண்டுள்ளது. இதனைச்செயற்படுத்துவதற்கு வழமையான முறையில் நிர்வாகம் இயங்குதல் வேண்டும். எனவே பல்கலைக்கழக நிர்வாகம் வழமையாக இயங்குவதனைத் தடைசெய்யாமல், ஒத்துழைப்பு வழங்குமாறு மாணவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்." என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

விமர்சனமும் கருத்தரங்கும்

நெல்லியடி, வியாழன்

கட்டைவேலி நெல்லியடி ப. மீநா கூ சங்க கலாசாரப் பெருமன்ற ஆதரவில் இம்மாதம் 31ம் திகதி சங்கமண்டபத்தில் பிற்பகல் "திக்கற்ற பார்வதி" என்றதிரைப் படக் கண்காட்சி இடம் பெறவுள்ளது.

இதைத் தொடர்ந்து இப்படத்தின் விமர்சனமும், கருத்தரங்கும் திரு. த சிதம்பரப் பிள்ளை தலைமையில் நடக்கவுள்ளது. இவ் வைபவத்தில் திரு. நெல்லை. க பேரன், திரு. ஐ. சண்முகலிங்கம் தென்னியான ஆகியோர் பங்கு பற்றுவார்கள். [இ]

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15-ம் திகதி அச்சிட்டு வெளியிடப் பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka Under number B/1003/81 Eelanadu P. O. Box 49. Telegram, Eelanadu. Telephone 22389 24126.

பிரேத பரிசோதனை நடந்தது

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் சவச்சாலையில் வைக்கப்பட்டிருந்த சடலங்கள் யாவும் நேற்று பரிசோதனை செய்யப்பட்டன.

பதில் சட்டவைத்திய அதிகாரி திரு. எஸ். பரிமேலழகர், பிரேத பரிசோதனைகளை நடாத்தினர். (ச)

மரண அறிவித்தல்

திருமதி நாகமுத்து நல்லதம்பி

புங்குடுதீவு 10-ம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி நாகமுத்து நல்லதம்பி 13 - 8 - 86 அன்று காலமானார். இவர் காலம் சென்ற நல்லதம்பியின் அருமை மனைவியும் சங்கரலிங்கம் செல்லத்துரை (உரிமையாளர்/கமலா ஸ்ரோஸ், கவுனிபொறேச் ஸ்ரோர்ஸ், யாழ்ப்பாணம்) திருமதி கமலாம்பிகை நல்லதம்பி (உரிமையாளர் நல்லதம்பி ஸ்ரோர்ஸ், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அருமைத் தாயாரும், சத்தியவதி, பரமேஸ்வரி காலம் சென்ற நல்லதம்பி ஆகியோரின் அன்பு மாமியாரும் பாரதிதாசன் (U.K.), பத்மதாசன் (U.K.) பாஸ்கரதாசன் திருமதி கண்ணகிதேவி கனேசரத்தினம் திருமதி கலாதேவி அரியராசா (ஜெர்மனி), கமலதாசன், கண்ணதாசன், கமலாதேவி, கௌரிதேவி, திருமதி மஞ்சுளாதேவி புஸ்பராசன் (ஜெர்மனி) வசந்தகுமார், சிவகுமார் (ஜெர்மனி) சியாமளாதேவி, கோமளாதேவி ஆகியோரின் அன்புப்பேத்தியுமாவார். அன்னாரது தகனக்கிரியைகள் 15 - 8 - 86 வெள்ளிக்கிழமை (இன்று) காலை 10 மணிக்கு புங்குடுதீவு மணற்காட்டு மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: ந. செல்லத்துரை.

(C-4074)